ஓம்
விநாயகநம

சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

இதழ்2 காலயுத்திவருஷம் தை மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை [2-2-1979] சுடர்7

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED 1979 PERIODICALS DIVISION

நல்ல நினைப்புகளை ஒழித்திடும் உயிர்க்கொலை எண்ணமும் குற்றங்களும் அற்று ஒழிய என்சிவனை என்றோ அடைவேன்

எம்பிரான் சுந்தரர் இவ்வாறு சொல்கின்றார். நாளும் நாளும் நம் சிந்தையில் பல பல எண்ணங்கள் உதயமாகின்றன. அந்த எண்ணங்களில் தொழில்படுவன சில. சில செயல்பட முடியாது போவன, ஆனால் தோன்றும் எண்ணங்களுக்கும் பயன் உண்டு. பலன் உண்டு. மாயாகாரியமான உலகத்துள் சிந்தை மிக அல்லலை விளைவித்து விடுகின்றது. அதன் தொழிற்பாடு காமம் குரோதம் மோகம் லோபம் மதம் மாற்சரியம் என்னும் ஆறு குணங்களால் அடிக்கடி துயரப்பாடான எண்ணங்களை எழுவித்துக் கொண்டே நிற்கின்றது. கடலில் அலைகளை யரும் வருவிப்பதில்லை. அவை இயல்பில் எழுவன அந்த அலைகள் என்றும் அடங்குவதில்லை. என்றுமே ஓயாது எழுவனவாகி உள்ளன, அதேபோன்று சிந்தையும் தன் சிந்தனைகளை பெருக்கியவாறு இருக்கின்றது.

இந்த சிந்தனைகளில் பல பல தோஷமுடையனவாக எழுந்து அத்தகைய சிந்தையில் அழுக்கைப் பெருக்கியவுடன் அந்த காரமான இருளில் சென்று அந்த உயர் சிக்குப்பட்டுக் கொள்கின்றது. அத்தகைய உயிர் அருள் நிலையை ஒருக்காலும் பெறமாட்டாது. அரிதில் அரிதாவது. எனவே சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இந்த உண்மைகளை அநுபவரீதியாகப் பெற்றுக் கொண்டு நமக்கும் நன்மையை விளைவித்திட ஓர் திருப்பதிக மூலம் சொல்லி இருக்கின்றார்.

திருவொற்றியூரில் சங்கிலியார்க்கு செய்த சத்தியம் தவறினமையால் கண் இரண்டும் மறைந்திட அங்கு நீங்கி காஞ்சியில் வந்தருளி ஒரு திருக்கண் பெற்று உய்ந்து அங்கு நின்றும் திருவாரூர் நோக்கிப் புறப்படுகின்றார். திருவாரூர் போகும் போது தான் திருவாரூர் பெருமையையும் கோயில் சென்று தரிசித்தலால் வரும் பேறுகளையும் எடுத்து மொழிகின்றார்.

அத்தகைய புண்ணியமும் அருளின் பெருமையும் நிறைந்த கோவில்களை எவ்வளவு புனிதமாக நாம் வைத்திருத்தல் வேண்டும். எவ்வளவு மனத்தூய்மை உடன் அதை நடத்திடல் வேண்டும் என்பதை எல்லீரும் நீங்கள் உணர்ந்து தெளிந்திட அவர் பாடியருளிய திருப்பதிகத்தை கீழே தந்தருக்கின்றேன். ஓதுங்கள் உணருங்கள். சைவ இளைஞர்களே தயவு செய்து இப்பதிகங்களை நீங்களும் நன்கு படியுங்கள். இதன் கருத்துக்களை உங்கள் சிந்தையில் கொள்ளுங்கள். உங்கள் அனைவர்க்கும் அவை நன்மையை வருவிக்கும்.

திருச்சிற்றம்பலம்
பண்-புறநீர்மை

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன் சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்(கு) எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.

அந்தியாய மாலைக்காலமும் நல்ல பகல்பொழுதிலும் ஐந்து பதம் கொண்ட எழுத்து ஐந்தும் மொழிந்து வழிபட்டு இந்த வகை வழிபடலால்; முற்பிறவியில் செய்த கொடுமை விளைவால் இப்பிறவியில் என்னை அறியா வகை வந்து மூடிக் கொள்ளும் படி எழுகின்ற வினைகள் தாமாக எழுந்து வந்து என்னை மூடி என் சிந்தையை மெலிந்திடப் பண்ணாது; என் சிந்தையைத் திடப்படுத்தி காமம் முதல் கொடுஞ்செயலின் பிணி அகற்றி நோய்களைந்து நல்வழியாக எனது சிந்தையைப் பராமரித்து நல்நிலைப்படுத்திச் சென்று தென் நாட்டில் உள்ள திருவாரூரினைச் சென்று சேர்ந்து என்னுடைய பெருமானை என்று சென்று அடையப் போகின்றேன்.

முன்செய்த வினையின் அநுபவிப்பால் உடலில் நோயும் கண்பார்வையும் அற்ற நிலையும் வருத்த சுந்தர மூர்த்தி சுவாமிகளின் கவலை இப்பாடலில் தொனிக்கிறது. என்று நான் என் அப்பனைச் சென்று சேரப் போவேன். ஐயோ முன்னை வினைக் காடு மூடுதே நான் என் செய்வேன் எனும் பதைப்புக்களும்; இவை நீங்கிட திருவாரூர் போய்ச் சேர்த்தல் நன்று என்றதும் அங்கு போவதன் நோக்கத்தை விளங்கினால் திருவாரூர் பேறும் பெருமையும் உணரவைக்கின்றார்.

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும் துன்று மலர்இட்டுச் சூழும் வலஞ்செய்து தென்றல் மணங்கமழும் தென்திரு வாரூர்புக்கு என்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே.

என்னைப் பற்றி நின்ற வினையின் கொடுமை நீங்கிட; காலை மாலை இரு பொழுதிலும் சிறந்த மலர் பறித்துச் சூடி வழிபட்டு அப்பனை பல முறையும் சூழ வலஞ் செய்து வழிபட்டு நான் உய்ந்திட தென்றல் காற்றில் சிவமணம் கமழும் தென் திருவாரூர் புகுந்த என் தந்தையான பெருமானை என்று நான் சென்று சேர உள்ளேன்.

முன்னை முதற்பிறவி மூதறி யாமையினால் பின்னை நினைந்தனவும் பேதுற வும்மொழியச் செந்நெல் வயற்கழனித் தென்திரு வாரூர்புக்கு என்னுயிர்க் கின்னமுதை என்றுகொல் எய்துவதே.

முன்னாக வந்துள்ள என் முதற் பிறவிகளில் முதிய அறிவினை நான் பெறாத வகையினால் பின்னாக உள்ள பிறவியிலும் முதிர்ந்த அறிவினைப் பெறாமையால் பின்னாக நினைந்த நினைப்பெல்லாம் பிழையான நினைப்பாகப் போயிட அதனாலே பல துயரங்கள் அடைவேனே. இந்த சங்கடம் நீங்கிடவும் பிழையால் வரும் துயரங்களில் பெருகிய நடுக்கங்களும் அற்று ஒழிந்திட; செந்நெல் விளையும் வயற் கழனிகள் சூழ்ந்த தென் நாடாய திருவாரூர் புகுந்து எனது உயிர்க்கு இனிய அமுதாண பெருமானை என்று நான் சென்று அடையப் போகின்றேன்.

திருவாரூர் இருந்த ஒளி திவ்விய அமுதாயது. அதனை உணரும் வாய்ப்பே முதிர்ந்த அறிவாகும். அந்த அறிவு முன்னைப் பிறவியில் தலைப்பாடாமையால் வழி வழி வரும் பிறவியில் பிழையான காம இச்சை முதல் போக இன்பத்துறை விருப்பமே பெருகியது. என் அப்பனை உணரும் உண்மையான எண்ணம் எழவில்லை என்ற கவலை இப்பாடலில் தொனிக்கின்றது. கண் பார்வை குன்றியதும் உடம்பில் நோய் வந்தபின்பு தான் தன் நிலையையும் தலைவனை நினையும் நினைப்பையும் எண்ணுகின்றார். ஆதலால் பிழைமூலம் பிறவி தோறும் மீளாத துயரப் பெருக்கம் பெருகிக்கொள்ளும், இதில் நின்றும் விடுபடுதல் மிக மிக அரிது என்பதை முன்னை முதற்பிறவி மூதறிவின்மை என குறிப்பால் இப்பாடலில் தெரிவிக்கின்றார். இந்த உடம்பு அழியும். இந்த உடம்பில் இருந்து நாம் பெறும் அறிவு மட்டும் பிறவி தோறும் தொடரும் என்பதை தெளிந்து கொள்ளுங்கள். உடம்பு அழிய தான்கொண்ட விரதமும் ஞானமுமே அன்றி மற்று எவையும் தொலையாத பெருவழியில் தொடரமாட்டா; வழிநடவா என்ற திருமூலர் பெருமான் வாக்கையும் தெளியுங்கள்.

நல்ல நினைப்பொழிய நாள்களில் ஆருயிரைக் கொல்ல நினைப்பனவுங் குற்றமும் அற்றொழியச் செல்வ வயற்கழனித் தென்திரு வாரூர்புக்(கு எல்லை மிதித்தடியேன் என்றுகொல் எய்துவதே.

நல்ல நினைப்புக்கள் யாவும் என்னிடம் தோன்றாவகை ஒழிந்திட அதனாலே தீய எண்ணங்களான கொலை செய்ய நினைத்தல் குமர்ப்பெண்ணின் கற்பினைக் கெடுத்தல் பிறன் மனைவியை விரும்பல் முதலிய குற்றமும் களவெடுத்தல் பொய் சொல்லல் முதலியனவும். நாள்தோறும் உணவிற்காகவும் வேறு செயலிற்காகவும் அரிதான பிற உயிர்களைக் கொல்ல நினைந்தமையால் எழுந்த பாவங்களும் என் மீது தோன்றும் குற்றங்களும் அற்று நீங்கிட; செல்வம் கொழிக்கும் வயல் நிறைந்த கழனிகளை உடைய தென் திசையில் உள்ள திருவாரூரின் எல்லை மிதித்துக் கொண்டிட அடியேன் என்று தான் போய்ச் சேர உள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங்கள் புரியாதிருந்தாலும் குற்றங்களைப் புரிய எத்தனித்து நினையும் நினைப்புக்கள் யாவும் தோஷம் வருவிப்பன. இந்த நினைப்புக்கள் உள்ளத்து எழும் போது அங்கு தெய்வீக நிலை ஒருபோதும் வரமாட்டாது. கொலை மூலம் தெய்வ நிலை அடைந்தார் எவரும் இலர். நினைத்தலே வில்லங்கம் தரும். அதே போன்று பெண்களைக் கற்பழித்தல் களவு செய்தல் முதலிய பழிகளும் பெரும் பெரும் துயர நிலையை வருவிக்க உள்ளன. அந்த அந்த இன்ப நுகர்ச்சியில் நாய் எலும்பைக் கடித்து தன் வாயால் வரும் உதிரத்தைக் குடித்தல் போன்று பெண் பழி முதல் பாதகம் அனைத்துந்தான் தனக்கு இன்றுற்ற நோயான கண்வருத்தம் உடல் நோயான வை என சுந்தர மூர்த்தி சுவாமிகள் நினைந்தமையால் நல்ல நினைப்பு ஒழிய என்றதும் குற்றமும் அற்றொழிய என்றது மாகும். முன்முன் பிறவி தோறும் செய்யும் குற்றங்கள் இன்னமும் இன்னமும் குற்றம் புரிதற்கே ஏதுவாக நிற்றலில் இந்த குற்ற நிலை அற்று ஒழிந்திட நான் திருவாரூர் போக வேண்டும் என்கின்றார். திருவாரூர் சென்று எல்லை மிதித்தால் என் பிழை அற்றுவிடும் என நினைக்கின்றார். அப்படியாயின் திருவாரூரின் அருட்பெருமை இனிது புலப்படக் காட்டப்படுகின்றது. இது மட்டன்றி ஆர் உயிரைக் கொல்ல நினைந்ததுவும் என்கின்றார். இதனாலே உணவின் சுவைக்காக ஊன் முதலியவற்றை உண்ணலும் உயிர்க் கொலை செய்தலும் திருவாரூர் எல்லை மிதிக்க அற்றுவிடும் என சுவாமிகள் சொல்வதாயின் இந்த உண்மையை நமது கோயில்களின் திருப்பணிச் சபைகளின் எஜமான்கள் உணர்வார்களோ? மாபிள் கல்லால் பளிங்கு மண்டபம் அடுக்கிய கோவில்களில் இந்த ஒரு அருள் நிலை இருக்கக் காணலாமோ? எந்தக் கோவிலில் இப்படி ஒரு நிலை இருக்கும்? இது எப்படி வரும் என்பதை மக்களே நீங்கள் உணர்வில் காணலாமோ? இது பற்றி ஏதும் தெரியுமோ? பிரசாரம் செய்யும் பெருமக்களே! நம்பியும் தும்பியும் என்ற வகை நவீன தலையங்களில் ஓலமிடும் தம்பிரான்களே ஒலி பெருக்கி மேன்மையாளரே நம்பி என்றவர் யார்? தும்பி என்றால் என்ன என்றதை நீரும் விளங்க வல்லீரோ? ஒலிபெருக்கியில் பேசி களைத்த பின்னர் தும்பிஊதுவீரோ.

கடுவரி மாக்கடலுட் காய்ந்தவன் தாதையைமுன்
சுடுபொடிமெய்க்கணிந்தசோதியைவன்தலைவாய்
அடுபுலி ஆடையனை ஆதியை ஆரூர்புக் (கு)
இடுபலி கொள்ளியைநான் என்றுகொல் எய்துவதே.

கொடிய வரியுடைய மாவாகி கடலுள் நின்ற சூரனை அக்கடலுள் வைத்துக் கொன்ற குமரப்பெருமானின் திருத்தந்தையான சிவனை: சுடுகின்ற காட்டில் எழுந்த பொடியினை மேனியில் அணிந்த சோதியானவனை; கொடிய தலையும் வாயும் உடைய கொல்லும் புலியின் தோலை உடுத்தியவனை; எப்பொருட்கும் ஆதியானவனை திருவாரூர் உட்புகுந்து கொண்டு இந்த ஏழு உலகங்களையும் ஆளுகின்ற அந்த ஈசனை என்றே? நான் சென்று எய்தப்போகின்றேன்.

கடுவரி மாக்கடலுள் என்றது கொடுமை விளைக்கும் விலங்குருவாய அசுரன் எனவும் பொருள்படும். விலங்கு மனப்பான்மை அசுரர்க்கு இயல்பில் பொருந்தியது. மனிதரிலும் அசுர குணங்களால் பீடிக்கப்பட்டவரில் விலங்கு மனப்பான்மையுடன் இருப்பதைக் காணலாகும். விலங்குகள் எப்பொழுதும் தன்னிடத்து மூர்க்கக் குணமும் பிறனை விலங்குகளை கொன்றுண்ணும் தன்மையும் கொண்டன. ஆதலால் இத்தகைய நிலை தெய்வ தத்துவத்தில் இல்லை. ஆதலால் தேவர்களுடைய புனித வாழ்க்கைக்கு விலங்கு மனப்பான்மை தகுதியற்ற காரணத்தால் கடு வரிமா என அசுரரது விலங்கியல்பை எடுத்து மொழிந்தவாறு.

சூழ்ஒளி நீர்நிலந்தித் தாழ் வளி ஆகாயம்
வானுயர் வெங்கதிரோன் வண்தமிழ் வல்லவர்
கள் ஏழிசை ஏழ்நரம்பின் ஓசையைஆரூர்புக்(கு)
ஏழுல காளியைநான் என்றுகொல் எய்துவதே.

சூழும் ஒளியும் நீரும் நிலனும் நெருப்பும் தாழ்வுறநிற்கும் கூற்றும் ஆகாசமும் வானில் உயர நின்ற வெப்பமுடைய சூரியன் நற்பேறு தரும் தமிழ் வல்லவர்கள் ஏழிசைகொண்ட யாழ் நரம்பின் ஓசை இவை அனைத்துமாகி நிற்கும் எம்பெருமானை திருவாரூர் புகுந்து இருந்து இந்த ஏழு உலகங்களையும் ஆழுகின்ற பெருமானை என்று நான் சென்று அடையப் போகின்றேன்.

பிறர்க்கு நன்மை தரும் தமிழ் பாடுவார் பொய்யடிமை இலாத புலவர்கள். இதனை வண்தமிழ் வல்லவர்கள் எனப் போற்றிய வாறு காண்க. இத்தகைய தூய்மை உடைய திருமுறை நெறிகளை நல்ல முறையாகக் கோவிலில் கடைப்பிடிக்க வகையறியாது தவிக்கும் மக்களுக்கு நெறிகாட்டும் சந்திரதீப வார்த்தைகளும் வண்தமிழ்என கூசாது கொள்ளலாம்.

கொம்பன நுண்ணிடையாள் கூறனை நீறணிந்த
வம்பனை எவ்வுயிர்க்கும் வைப்பினை ஒப்பமராச்
செம்பொனைநன்மணியைத்தென்திருஆரூர்புக்கு
என்பொனை என்மணியை றுகொல் என்
எய்துவதே.

பூங்கொம்பினை ஒத்த நுண்ணிய இடை உடைய உமை அம்மையாரை தம் திருமேனியில் ஒரு கூறாக உடையவனை, திருநீறு நிறைய அணிந்த அறிய முடியாத அப்பனை எல்லா உயிர்க்கும் தோற்றம் முடிவு இவையாவிற்கும் என்றும் வைப்பாக உள்ளவனை இது இவ்வாறு என ஒப்பு எடுத்து காண்பிப்ப அதற்கு அமையாத செம்பொன்னை நல்ல மணியை தென்நாடாய திருவாரூர் புகுந்திருந்த என் பொன்னை என் நல்ல மணியை என்று தான் நான் சென்று அடைவேனே.

நீறு அணிந்த வம்பனை என்றது திரு நீறு தெரியாது பூசுகின்றவனைத் தெரியாது. திரு நீறு பூசியவர் யார் எனப்பார்த்திட எக்காலமும் ஆராலும் முடியாது என்றமையால் வம்பன் என்றார். தான் பூசியும் தன்னைக் காண்பியாது நின்றுன் போலும். இதேன் உனக்கு இந்த வம்புத்தனம் என்று தோழருடன் நட்புரிமையால் பேசுதல் போன்றே இங்கும் சொல்கின்றார்.

ஆறணி நீள்முடிமேல் ஆடர வஞ்சூடிப்
பாறணி வெண்தலையிற் பிச்சைகொள் நச்சரவன்
சேறணி தண்கழனித் தென்திரு வாரூர்புக்(கு)
ஏறணி எம்மிறையை என்றுகொல் எய்துவதே.

கங்கை ஆறு அணிந்த நீண்ட முடிமேல் ஆடும் பாம்பினை அணிந்து பருந்துகள் விரும்பி வட்டமிடும் வெண்தலை ஓட்டில் பிச்சை ஏற்றுக்கொள்ளும் நச்சுப் பாம்பை கச்சாக அணிந்த பெருமான் அமர்ந்த சேறுகள் தானும் திவ்வியமான பசளையாக குளிர்ந்த கழனி வயல்களையுடைய தென் நாட்டில் திருவாரூர் புகுந்து இடபத்தின் மேல் அலங்காரமுடன் வருகின்ற எம் இறைவனை பெருமானை என்று நான் சென்று அடையப் பேகின்றேன்.

மண்ணினை உண்டுமிழ்ந்த மாயனும் மாமலர்மேல்
அண்ணலும் நண்ணரிய ஆதியை மாதிணைடும்
திண்ணிய மாமதில்சூழ் தென்திரு வாரூர்புக்
(கு) எண்ணிய கண்குளிர என்றுகொல் எய்துவ
தே.

இப் பூமியை உண்டு உமிழ்ந்து விட்ட திருமாலும் பெரும் தாமரை மலர் மேல் இருக்கும் கடவுள் பிரமனும் என்றுமே நண்ணிக் கொள்ளற்கு அரிய எவற்றிற்கும் ஆதியான பெருமானை பெண் ஒரு பாகமாக விளங்கிடும், திண்மை உடைய பெரிய மதில் சூழ்ந்த தென்நாடாம் திருவாரூர் புகுந்து அவனையே காண்பேன் என எண்ணிடும் என் கண்கள் குளிர்ந்திட என்றே நான் தம்பெருமானை அடையப் போகின்றேன்.

மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆரூரை
நன்னெடுங் காதன்மையால் நாவலர் கோன் ஊ
ரன் பன்னெடுஞ் சொல்மலர்கொண் டட்டின
பத்தும் வல்லார் பொன்னுடை விண்ணுலகம்
நண்ணுவர் புண்ணியரே.

மின்னிடும் செஞ்சடை உடைய எம்பெருமான் வீற்றிருக்கும் திருவாரூரை நன்மை கொண்ட நீண்ட பெரும் காதலால் திருநாவலூரில் வந்த தலைவன் நாவன்மை உடையார்க்கு முதல்வன்; நம்பியாரூரன் பல நெடிய சொல்லாகும் மலர் கொண்டு எம்பெருமானைப் பூசித்த பாட்டாகும் இப் பத்தினையும் கற்று வல்லவர்கள் பொன்னுலக விளங்கிடும் தேவ உலகில் சென்று சேர்வர். அவர் புண்ணியரே!

தமது பாடலை ஓதுவார் புண்ணியர் என்கின்றார் எம்பிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இதனை எம் சைவமக்களாகும் அனைவரும் உணரவேண்டும். புண்ணியம் இல்லாவழி புண்ணியப் பொருளான இவை தித்திக்காது, பதில் சீகாழி முதல் சினிமாக் காரருடைய பாட்டுத்தான் தித்திக்கும். கினிமாக் காரனை சீகாழி திருமுருக கிருபானந்த வாரியார் பேதைய ரான பிராமணர் இவர்கள் சைவத்திற்கு செய்த பழியும் இழுக்கும் எக் காலமுமே இவ்வுலகை விட்டு நீங்காத. வகை பெருகிக் கொண்டது. இவர் போக்கால் பாட்டால் பேச்சால் தூய்மையுடைய வேத வழக்கங்களில் பொய்மை புகுந்து நெறிகள் மாறி கோவிலில் உருவாக வேண்டிய சாந்த நிலைகள் அழிபட்டுள்ளன. மக்கள் கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடியாது தாம் விரும்பியபடி நடக்கலாம் எனத் துணிந்து கொண்டார்.

நால்வர் நெறியால் உயர வைத்த சமயத்தை; இவர்கள் வஞ்ச மனத்தின் பொருள் வேட்கையால் நெறிதவறி நடந்து தங்கள் பேச்சிலும் பாட்டிலும் எடுபடும் பேதை மக்களை கோவில் புனிதத்தையும் அடக்க ஒடுக்க நிலையையும் கெடுத்து திடப்பண்ணிக் கொண்டு தம் பயணத்தை சீக்கிரம் செய்திட்டார். இருள் வந்தபின் தான் எல்லாம் விளங்கும். இப்ப எல்லாம் சோக்காக இருக்கும்.

பெரியோர்களே! சந்திரதீபம் புண்ணியப் பெருமக்களாகும் நாயன்மாரது திருப்பதிகங்களையும் தாங்கிக் கொண்டு பாவிகளான பிரசார வீனர் செய்யும் தவறுகளையும் எடுத்து துணிவுடன் காட்டிக் கொண்டு இருள் எது ஒளி எது என்று தெளி படுத்திக்கொண்டே உளம் கனிந்து உங்கள் கைகளில் வருகின்றது. புண்ணியப் பொருளான இதனைப் போற்றி உங்கள் சந்ததியின் நன்மையைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யும் புலாலும் தற்பெருமையும் நீங்கினால் சிவகதி தானாக விளையும்

அவர் ஒரு சாமி!, இவர் அவரிலும் பெரியசாமி; என்று அந்தரப்பட்டு ஓடாதீர்!. அங்கு ஆரும் சாமி இல்லை. உங்களில்தான் தெய்வம் இருக்கு!. ஒழுக்கமாக நடந்து தேடிப் பாருங்கள். நிச்சயம் தென்படும் ஒழுக்கம் உயிரிலும் மேம்பட்டது என சாதித்திட சந்திரதீபம் தன் உயிரைப் பணயமாக வைத்துள்ளது.

திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் முதல் தெய்வ ஞானிகள் யாவரும் நமக்குச் சொல்லி வைத்துப் போன சில வாக்குகளை நம் நாட்டு மக்களுக்கு எடுத்து சொல்வது என் பணி. இது ஒரு சேவை. இந்த சேவையில் சில அலுவல் இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பன அவர் வழிக்கு தகாதனவாகக் காணப்பட்டால் அவற்றையும் தகாது எனக்காட்டல் என் உயர்ந்த பணியாகும்! தவறுகள் காணும் போது தவற்றைச் சுட்டிக்காண்பிப்பதுவும் தவறு செய்வாரை சுட்டிக் காண்பிப்பதும் சிறந்த ஒரு தருமமாகும்.

திருநாவுக்கரசர் ஒரு தேவாரத்து கடவுள் தன்மை எவ்வாறு வரும் எனச் சொல்கின்ற போது அந்த கடவுள் தன்மை பெறும் வழியை வேளாண்மை செய்யும் தொழிலுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார். வேளாண்மை அதாவது நெற்பயிர் செய்வார் நெல்லைக் கொண்டு போய் கல் நிலத்திலும் மேட்டு நிலத்திலும் விதைத்தால் பலன் கிடைக்குமோ? ஒரு போதும் கிடையாது. அந்த நெல் முளைக்கவும் மாட்டாது. அடுத்து சில முளைத்தாலும் பயன் தராது. இதை நாம் எல்லாரும் விளங்க வேண்டும். ஆதலின் நெல் முளைத்து பயன் தரவேண்டின் நெல் வித்திடும் நிலத்தை முதற் கண் உழவேண்டும். ஒருக்கால் அன்றி பல முறை உழவேண்டும். உழுத நிலத்த்தில் பின் நெல்லை விதைத்தல் வேண்டும். நெல் விதைத்தால் நெற்பயிர் முளைத்திட அதனுடன் களைப்புல் சேர முளைத்து நெல்லை மூடி களைப்புல் மேலோங்கி வளர நெல் பலிதமாகாது பாழாகிப் போம். ஆகவே களைகளைப் பிடுங்கிட வேண்டும். களைப்புல் நெல் போல இருந்தாலும் அவை உண்மை அன்று. ஆதலின் பொய்மையான களையை பிடுங்கி அகற்றியபின் நீர் பாய்ச்ச வேண்டும். நீரைப் பாச்சிட பயிர் செழிப்புற்று வளரும் நிலையில் பிற மிருகங்கள் வந்து பயிரை அழித்திடக் கூடும். அதற்காக மிருகங்களைக் கொல்வதோ? இல்லை. அது தகுதி உடைய செயல் அன்று. ஆனபடியால் நெல்வயலைச் சுற்றி வேலி அடைக்க வேண்டும் இதோடு அமையாது நெற்பயிர் செய்வார் நாணயமுடையராய் இருத்தல் வேண்டும். பெரும்பாலும் நெற்பயிர் செய்வார் கடன் பெற்று தொழில் செய்வாராதலின் நாணயமாக செம்மையாக நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். இவ்வளவும் செய்தால் நெல் பயிர் தானாக விளைந்து பயன் தரும் இது அநுபவம். திருநாவுக்கரசர் இந்த அநுபவத்தை தெய்வீக நிலையிலும் வைத்து சிவகதியை நீங்கள் பெறவிரும்பின் நெற்பயிர்க்கு செய்யும் அதே தன்மை போன்று உம் வாழ்வை ஒழுக்க நிலையில் ஒரு தவறும் இன்றி அமையுங்கள் சிவகதி தன்பாட்டில் விளையும் என்கின்றார். அவர் சொல்வதைப் பாருங்கள்! முதற் கண் வயலை உழுவது போன்று நீங்களும் மெய்மை என்ற வகை உழவைச் செய்யுங்கள். அதாவது வாழ்வில் உண்மைக்கே இடங்கொடுங்கள். உண்மை பேசுங்கள். உண்மை பேசி வாழ்தல் மிகச் சங்கடம். அது கபடம் வஞ்சனை போல இறுகிய கரடு முரடான நிலத்தை உழுது புரட்டுவது போலேயாகும். ஒருவன் வாழ்வில் உண்மை பேசத் தொடங்கினால் எத்துணை சங்கடமாவது அது என நீங்கள் கற்பனை செய்யுங்கள். இதனால் தான் இன்று பல பிரசாரகரிடத்து பெண்களிடத்து பிராமணரிடத்து உண்மையிலாதிருக்கக் கண்டு ஐயோ இவர்கள் படுமோசம் செய்பவர். இவர் பேச்சில் பாட்டில் பூசையில் நீங்கள் எடுபட்டுப் போகாதீர் என நாம் உங்களை எச்சரிக்கை செய்த காரணமாகும். என் சேவையில் யாரும் இந்த ஒருவகையில் குறை காண முடியாது. நம்மீது குறை காண்பவர் உண்மையில் நயவஞ்சகரே! நான் உண்மையுடைய அடியவர் இன்றைய பிரசாரகர் பிராமணர் பெண்கள் நடப்பது போல் இல்லை என்று சொல்லிடும்போது என் வார்த்தையில் நம்பிக்கையிலாது அப்படிச் சொல்லக் கூடாது என அவர்க்காகப் பரிந்து பேசி என்னை வன் செயல் செய்ய எத்தனிப்பாருடைய நடத்தைகள் பற்றி நாம் உணராதிருக்கவில்லை என நீங்கள் நினைக்க வேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும் சில பெண்களுடன் ஏற்பட்ட உறவுகளால் அத்தகையோர் நடந்து கொள்ளும் தவற்றை நாம் சுட்டிக் காண்பிப்ப ஆருக்கும் கோபம் வரும். அது நமக்கு தெரியாமல் இல்லை. இந்தச் செய்திகள் ஆங்காங்கு வாழ்கின்ற மக்களுக்கு தெரியாமல் இல்லை. இருந்தாலும் நாம் இதைப் பற்றி ஏன் பேசி வீண்பகையைத் பழியைத் தேடுவான் என அவர்கள் தெரிந்தாலும் வெளியில் சொல்லாமல் கடவுளிடம் அவற்றை ஒப்புக் கொடுத்திட்டு இருக்கின்றனர். இன்று இலங்கை வந்து போன ஒவ்வொரு சமயத்தலைவர் பற்றியும் அவர் நடத்தை பற்றியும் பலருக்கும் தெரியும். இந்த பிரசாரகர் இங்கு வரும் போது என்ன கொண்டு வந்தவர் அவரை அழைப்பித்தவர் யார்? அவர் தொழில் யாது? அவர்கள் தம் தொழிலிற்கு வாய்ப்பானவற்றை செய்வியாது விட்டிடுவாரோ? செய்வித்திருக்கலாம் தானே போகும் போது பிரசாரச்சுவாமிகள் என்ன கொண்டு போனது எவ்வளவு? உண்மையாக கொண்டு போன அவ்வளவும் அவர் வாழ்விற்கு தேள்வையா? இதில் பிரசாரத்திற்கு எவ்வளவு? சொந்த இன்பத்துறைக்கு எவ்வளவு? என்றதெல்லாம் அறிவாளிகள் உணர்ந்து இத்தகையோரை வருவிக்க எத்தனிககும் வியாபாரிகளுடைய போக்கை உணர்து இந்த பெயரோடு நாம் ஏதும் சொன்னால் நம்பாடு ஆபத்து என மௌனமாக இருந்து கொண்டனர் இந்த வகையான பிரசாரகர்களில் பலர் உண்மையிலாத போலித்தனத்தால் மக்களை கோலங்காட்டி மயங்க வைத்தவர் உண்டு. இவர்களில் பிரபல்லியமான ஒரு பிரசாரகருக்கு மூன்று மனைவிகள் உண்டு. என்றும் அந்த மனைவியில் ஒருத்தி ஓர் பிராமணப் பெண் என்றும் அவளுக்கு முன் தாரத்திற்கு ஓர் ஆம்பிளைப்பிள்ளை உண்டு. என்றும் மற்று இரு பெண்கட்கும் பிள்ளை இல்லை என்றும் அவர் வாழ்வு பற்றி கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஓர் பிரபல சோதிடர் (ஓர் பெரியவர் நம்மிடம் செய்தி தெரிவித்தார். பொதுவாக தென் இந்தியாவில் ஒரு மனைவியல்லாது பலமனைவிகளை வைத்திருப்பது கௌரவமாகக் கருதப்படுவது என பலர் சொல்ல நான் கேள்விப்பட்டதுண்டு. பொருள்களை வாருவது போல் பெண்களை வாரிக்கொள்வதும் பொருந்துவதே! நாம் அந்த விடயத்தில் தலையிடமாட்டோம். ஆனால் திருநாவுக்கரசரும் சம்பந்தரும் இருவரும் நமக்கு கருத்து தெரிவிக்கும் போது ஏகமனதாக தெய்வீக நிலையில் இது ஆகாது என்கின்றார். தெய்வ நிலையில் மடவார் நோக்கில் துளங்காத சிந்தையராய் என நாவுக்கரசரும்; கற்றவர் காய்வது காமனையே என ம்பந்தரும் சொல்லும் கருத்தை என்ன என நீங்கள் நினைத்தால் சரி!

இன்றைய பிரசாரகர்கள் பலர் என்னவும் செய்யுங்கள் முருகா என ஒதுங்கள் எல்லாம் சரி உங்களுக்கு சாசு வரும் தனம் வரும் பொருள் வரும் வீடுவரும் என்றெல்லாம். பிரசாரம் செய்திட அதனை மக்கள் விரும்பி ஏற்கின்றார். மக்களுடைய விருப்பம் முருகன் அருள் இருந்தால் எத்தனை பொய் சொன்னாலும் எங்கடை காசு வந்தால் சரி என்றே எல்லாரும் புண்ணியத்திலும் பார்க்க பொருளைப் பெரிதும் விரும்புகின்றார்.

இத்தகைய நிலையில் தம் சமயவாழ்வில் உண்மை இலாது இருத்தல் உணரப்படவேண்டும். உலகில் பிரபல்யம் சில காலம் தாமாக வந்து சேரும். அதே பிரபல்யல் அநேகதுயர நிலைகளைச் செய்வித்திடும். பிரபல்யமடைந்த பொழுது நெறிகள் நாறுமாறாகத் தவறிடுகின்றது. நீதிபறி போகின்றது தருமம் தடுமாறிக் கொள்கின்றது.

பொது மக்கள் எப்பொழுதும் போலியையே விரும்புவார்கள். ஒருவன் துட்டத்தன முடையவனாக இருக்கும் பொழுது அவனைப்பார்த்து உன் துட்டத்தனத்தை முதல் குறை என்றால் அதற்கு அவன் சம்மதியான். அவனுக்கு நீ என்னவும் செய் முருகா என்று நீசொல்லு என்றால் அவன் சரி அச்சா என்று சொல்லி எத்தனையோ தரம் முருகாசொல்லி; எத்தனையோ பேருக்கு இன்னமும் அடிப்பான். அடிப்பிப்பான் அவனைத்திருத்த முடியாது. முருகா சொல்லி களவு எடுப்பான் கற்பும் அழிபான். இந்த வகையாக எதனையும் செய்யுங்கள் முருகா என்றுசொல்லுங்கள் என்று நமது பிரசாரகர் இன்று போலித்தனமான ஓர் சமயப்பிரசாரம் செய்து காசு வேண்டுகின்றார். அந்தக்காசை ஒழுங்கிலாத கள்ளக்கடத்தல் மூலம் கொண்டு போகின்றார். இத்தகைய நோகாமல் பேசும் பிரசாரகரை பொது மக்கள் விரும்புவதில் ஆச்சரிய மில்லை. ஏன் எனில் மனிதன் தனக்கு இவ்வுலகில் வேண்டியது பொருள் மதிப்பு உத்தியோகம். இவற்றை பெறவே கடவுள் வழிபாடு. அந்தவழிபாட்டிற்கு இயைவாக பிரசாரகரும் பேசியவுடன் எல்லாமக்களும் ஏற்பார்கள். அவர் பேச்சு அருமை அருமை என்பார்கள். ஆனால் அவர் என் செய்கிறார்? நீர் என் செய்கின்றீர்? என்றால் தான் நம்மீது கோபம் வருகிறது.

திருமுருககிருபானந்த வாரியார் பிரசங்கத்தில் பிரியமுள்ள என்நண்பரான ஓர்கூட்டுறவுப்பரிசோதகரை சில நாளுக்கு முன் கண்டேன். அவர் வயல்அருகாமையில் உள்ள புல்லை தனது பசு மேயும் படி கயிற்றில் பிடித்திருந்தவர். பசுவிற்கு மூக்குக்ககிறும் போடப்பட்டிருந்தது. அவர்என்னைக்கண்டதும் என்னப்பா கிருபானந்தவாரியாரைப் பற்றி உன்ரை பேப்பரில் ஏதோ எழுதினியாம். சரி இல்லை. அந்தாள் ஓர் பெரிய மனிதனாச்சே அவர் பிரசங்கம் நல்லது. நான் போய் கேட்கிறனான் என்றதும் நான் சொன்னேன் நீங்கள் சொல்வது சரி அவர் பேச்சு நல்லது. அதைப் பிழை என்று சொல்லவில்லை ஆனால் அவர் நடந்து கொள்ளும் முறை தான் சைவநெறிக்கு ஒவ்வாததாக இருக்கின்றது அவர் காசு வேண்டுகின்ற விதமும் கொண்டு போகும் விதமும் நன்றாயில்லை உண்மைக்கு மாறு அருவருக்கத்தக்கது. சிவனடியார் கைக்கொள்ள வேண்டிய சில ஒழுக்கங்களுக்கு முரணாகவே நடக்கின்றார். பொய்யான வழியில் நடந்து கொண்டு பிரசாரம் செய்யும் போது அதைக் கேட்கும் மக்களிடம் இன்னமும் பொய்யைப் பெருக்கும் வாழ்வாக அமையுமே அன்றி மெய்மையை என்றாதல் உணரும் வாய்ப்பு பெறமாட்டார் என்று சொல்லிக் கொண்டிருக்க; இவர் கயிற்றில் பிடித்திருந்த பசு வயலில் உள்ள நெற்கதிர்களைத் தின்றது. நான் அதைக் காட்டினேன் அப்போது அவர் அதைக் கண்டு எடொடே! இந்தச் சனியன் அதுக்கிடையிலை அதை தின்றிட்டதே! என்று பசுவின் மூக்கு கயிற்றில் கட்டியிருந்த கயிற்றை இழுத்தார். (பசுவிற்கு மூக்குக்குத்தி கயிறு போடல் நன்றல்ல) அப்போது நான் சிரித்துக் கொண்டு சொன்னேன் பாரும் இந்த ஒரு செயலில் வைத்து உமக்கு விளங்கப்படுத்துகின்றேன்;

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மற்றையோடைய நெல்லைப் பசு தின்பது நன்றல்ல. இ தே தன்மையில் கிருபாணந்த வாரியார் பேச்சு உக்மகு நல் லாய் பிடிக்கும். ஏன் என்றால் அவர் தமது பலவகை பே ச்சுடன் பாவக்காய்ச் சம்பல் தக்காளி இரசம் வடகம் இட் டலி முதல் பலகார வகையின் இனிமையும் சொல்லி அ ரோகராவும் சொல்லி முருகா என்று சொல்லுங்கள் நீங்க ள் எப்படியும் செய்யுங்கள் எல்லாம் சரி என்பார்.

ஆனல் நாம் சந்திரதீபத்தில் நல்லதைச் செய்து தீய தைவிலக்கி பின்னர் முருகனை வழிபடுங்கள் எனச்சொல் கின் றேன். என் பேச்சு பலருக்கு பிடிக்காது. நான் இப்பணியைக் கடவுளுக்காகச் செய்கின்றேன் வாரியார் காசுக்காகச் செய்கிறார். உண்மையைச் சொல்லப் போய்த்தான் தெல்லிப்பழையில் அடியும் வாங்க வேண்டிவந்தது என்றதும்; என்ணண்ணை உனக்கு அடி க்கவோ என்றார். ஓம் என்றதும் அதார்ரண்ணை என்றார் நான் சொன்னேன் இப்பொழுது அதற்கு நேரமில்லை எனது பத் திரிகையில் எழுதி இருக்கிறேன் இதோ இதில் பாரும் என என் பத்திரிகை ஒன்றை அவரிடம் கொடுத்து விட்டு அப்பால் சென்றேன்.

இந்த நிலையில் தான் திருநாவுக்கரசர் தெய்வ அருளை நீவிர் பெற விரும்பின் முதற்கண் வாழ்வை உண்மை யா க்குங்கள் அந்த உண்மை வழியில் நின்று பின்னர் தான் அ ருள் பெறவிருப்பம் கொள்ளுங்கள். உண்மை எனும் வாழ் வில் இறைவன் அருள் பெறும் விருப்பத்தை விதையுங்கள் என் கின்றார்,

உண்மை பேசி உத்தமனுக வாழ் என்று சிவநெறிக் காவ லர் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டுக் கொடுக்கிறார். ஆனல் அவரைக் காணப் போன சிலருக்கு வீட்டில் இருந்து கொ ண்டு வேலைக்காறனிடம் முதலாளி இங்கை இல்லை வெளியா ல் போய் விட்டார் என்று சொல்லு என்ற உண்மை வ ரலாறு உண்டு. ஏன் என்றால் அவரைக் காணவந்தவரைக் காணப்பிடிக்காத காரணத்தால். தனது தொழிற் சாலையில் வேலை செய்யும் ஒருவர் உண்மையான வீட்டு இடைஞ்சலுக்கு ஏதும் உதவி கேட்டால் அப்படியாயின் நீ நாளையுடன் நி ன்றிடு வேலைக்கு வரவேண்டாம் என்று சொல்லப் படுகிறது. ஆனல் பொய்யை மெய்யாகிப் புரட்டும் புழுகர் பிரசங்கி யர் தம்பிரான்கள் பிரமுகர்கள் போனல் அவர்கட்கு ஆ ட்களின் கனம் தண்டு கோலம் குறி கண்டு ஆயிரம் மு தல் பலவும் கொடுபடுகின்றது. இத்தகைய செயலால் அத் தகைய கொடையாளியின் வாழ்வை உண்மை என்று கரு த இடமில்லை.

ஆகவே உண்மையின் உறுதி தெய்வ அருள் பெறவிரும்பு வோர்க்கு அவசியம். அடுத்து உண்மை வாழ்வில் தெய்வ சிந்தை கொண்டாலும் அப்பொழுது அந்த சிந்தையில் வய லில் நெல்லை விதைத்தால் சூளப்புல் விதையாது முளைத்தல் போன்று பொய்மையைப் பெருக்கும் தற்பெருமை விஞ்ஞா னம் வீம்பு இடம்பம் புகழ் இவற்றின் மேல் ஆசை இவை தோன்றும். இதற்காகத்தான் இந்தவகை களைப்புல் போன்ற நெறியற்ற செயலைக் குறிப்பிட்டதாகும். நவாலிக் குரு க்கள் புல்லுருவிகள் என்று சில சீலமிலாத அந்தணர் செய லைச் சுட்டிக் காட்டும் போதும் இந்த திருநாவுக்கரசருடைய பொய்மையாம் களையை வாங்கி என்ற கருத்தை அடிப்படை யாகக் கொண்ட தாகும்.

நெல் இருக்க புல்லைஉருவுகின்றவன் புல் உருவியே அதே போ ன்று சீலம் இல்லாத அந்தணர் செயல்யாவும் புல் போலா கிவிடும் இன்று சீலமில்லாத அந்தணர் செயல்கள் ஒலிபெ ருக்கியில் மந்திரமோதல் கும்பாபிஷேகங்களில் விளக்கமிலாத விபரீதச் செயல் கொடியேற்றங்களில் அதற்குரிய கீல மிலாத வகை நடத்தை இவையாவும் புல் கதிர் உருவும் செயலே.

நெல் வயலில் நெல்லையும் புல்லையும் வெளியில் நின்று பார்பார் அறிய முடியாது நெல்வயலில் புல்லு வளர்ந்து மூடி நிற்கின்றபோது அதைத்தூர நின்று காணபார்கு நல்விளைவு போலத்தெரியும் வயலுக்குள் இறங்கிப் பார்தால்தான் நெல் லையும் புல்லையும் தெரியும். அதுவும் நெல்லையும் புல்லையும் வேறுகக் காணும் விளக்கமுடையார்க்கே தெரியும். மற்றை யோர்கு தெரியாது. இதனல்தான் வேத நெறியின் புனிதம் விளங்காத மக்கள் புல்லுரிவிப் பிராமணனது செயலையும் சரி என ஏற்க்கின்றார்.

இன்று கோவில்களில் கிரியை திருவிழா இவை செய்வோர் அவை ஊரார்க்கு விளங்க வேண்டும் என்ற எடுபிடியுடன் செய் கின்றார்; நாலு பேர் திருவிழா விற்கு வரட்டும் என்று பல வேடிக்கைகள் தெய்வ நிலைக்கு எற்காதன வற்றைச் செய்கின்றார்; தம் செயலில் மக்கள் கூட்டம் பெருகு வதைக் கண்டு மலர் கின்றாரே ஒழிய இறை வன் திருவருள் பெற என் செயல் என்னுமோ? என சிந்திக்கின்று ரில்லை. அதற்காகத்தான் கோவிலால் ஒலிபெருக்கியை அறவே நீக்குங் கள் விளம்பரத்தை அறவே நீக்குங்கள் நீர் இறைவனுக்கு செய் யும் புனிதமான தொண்டை இறைவனுக்கு பிரீதியாகச் செய்யுங் கள்; விண்ணனைச் செயல் யாவும் பொய்மையே அவையாவும் நீக்கப் படல் வேண்டும் என நாம் தீபத்தில் வலியுறுத்துகிறோம்; புண்ணியர் என் கருத்தை ஆதரித்தனர். ஓர் திருவிழாச் செய்யும் போது ஆக மம் சொல்லியவழியில் பூவும் நீரும் அபிஷேக திரவியங்களும் சந்தனக் காப்பும் சிறந்த நெய் விளக்கும் கும்பமும் பூமாலையும் முத்துமாலை யும் திருவாபரணமும் மங்கல இசையுமே உண்மைக்குரியன,

இவையலாது இவற்றைச் சுருக்கி ஒலிபெருக்கி மின் வி ள க் கு பிரசங்கம் வில்லுப்பாட்டு மேளடக்கச்சேரி இவையாவும் பொய்மைக் குரியன. இவையாவும் மனங்களை மகிழவைக்கச் செய்வதே அன்றி இறைவனுக்கு உரியன அன்று. இதை பொது உணர்வுடைய எவர் க்கும் விளங்கவேண்டும். ஆகவே திருநாவுக்கரசரை ஏ ற் ப தா யின் நாம் இன்று கோவிலில் பெருக்கும் பொய்மைக்குரிய செயலை நீக்கி டவே வேண்டும்.

மக்களை சமய உணர்ச்சி பெறச் செய்ய; கோவில் போகாதா ரை கோவிலிற்கு வரப்பண்ணத்தான் பிரசங்கம் வில்லுப்பாட்டு ஒலி பெருக்கி வைக்கின்றோம் என்று சிலர் சொல்லுகின்றார்கள். அவர் பேச்சு உண்மை அத்திவார மில்லாதது. அவர் ஆடம்பரத்தை விரும்பி ஆரவாரிப்பவரே அன்றி அமைதிக்கு உரியவர் அன்று. கோவிலில் அருளை புனிதத்தை பாழாக்கிய பின் மற்றையோரை இவர்கள் எப்படி புனிதமாக்க முடியும். கோவிலில் ஒலி பெருக்கி முதல் பாவப்பொருளைப் பாவித்தவர் உடன் பாவியேயாகின்றார். இவர் பால் புண்ணியம் அற்றுவிடும். பாவி பிறகு என் னென்று புனிதமான உணர்வை ஏற்படுத்த முடியும். தயவு செய்து இதற்கு பதில் தருமாறு யாரையும் கேட்கின்றேன். என்னை அடித்துக் கொல்ல முன் பாவிப்பிராமணனையும் துர்க்கை அம்மன் கோவிலா ரையும் உங்கள் ஆருக்கும் வேதநெறி விளங்கினுல் தயவு செய்து பதில் தாருங்கள் எனக் கேட்கின்றேன். உங்களைப் போல் நான் பொய்யன் அன்று. பாவி அன்று. உண்மை உணர்வைக் குருபரன் அரு ளால் பெற்ற புண்ணியன். நீவிர் பாவிகளான படியால் என்னை அடித்திட முற்பட்டீர்?

பிராமணன் ஒரு புறமானலும் சைவக் குருக்கள் அல்லது பூசாரி சைவர் என்றவர் செய்யும் அநியாயங்களுக்கு அளவே இல்லை! சைவர் என்பவர் வெளியில் திருநீறு வடிவாய் குறி இழுத்துள்ளான். ஆனல் அவன் செய்யும் வஞ்சனைகட்கு எல்லை இல்லை. உண்மையில் சைவன் என்ய ஒருவனை நான் எம் நாட்டில் தூயவனுக வாழ்வு உடையவனை காட்ட மாட்டேன். அந்தனர்களில் இன்றும் அறநெறி வழுவாத உத்தமர் சிலர் உண்டு. ஆனல் சைவன் என்பாவில் ஒருவனும் இல்லை என்று சொல்லலாம். சந்தர்ப்பத்தை ஒட்டி தானம் போடுவதில் சைவன் (பூசாரி) தலையங்கம் வகிக்கிறான். இவர்களில் பூநூல் போட்டவர்களும் பலர் உண்டு. இவர்களில் தத்தமக்குரிய உண்மை வழிகளில் யாருமே இல்லை. எத்தனை பொய் பேசவேண்டுமோ? அத்தனையும் பேசநிற்கிறார்;

திருநாவுக்கரசர் இதைத்தான் வலி உறுத்துகின்றார்: முதல் உண் மையை கடைப்பிடி. பொல்லை திருகுதர்ளத்தை விடு என்றே சொல் கிறார். நாம் வாழ்வில் பொருளாசை மேல் கொண்ட காதலால் இந் தப் பாதகர்க்கு அடிமையாகி இவரிடம் அருச்சனைத் தட்டம் கொடு க்கிறோம், திருநாவுக்கரசர் சொல்வது சரியானல் இவங்கள் செய்யும் அர்ச்சனையில் பலன் வருமோ? சிந்தித்துப் பாருங்கள்.

உண்மையில் வேதநெறியை மாற்றிய பிராமணரும் சைவனும் அர் சனைக்கு தகுதி உடையவர் அன்று. அவர்களைக் கோயில் அர்ச்சனைக்கு வைத்திருத்தல் சரியில்லை. இவர்களை வைத்திருத்தலிலும் மக்கள் யாரு ம் நீர் போய் பூசை செய்யுங்கள் என்று விடலாம்.

சிவகோசரியார் திருக்காளத்தியில் ஆகம வழிசெய்த பூசையை ஏற்ற என் ஐயன் சிவன் கண்ணப்பர் ஒரு மந்திரமும் தெரியாதவர் செய்த பூசையை ஏற்றார்தானே! ஏற்று முத்தியும் கொடுத்தார்தானே!

ஆகையினல் கோவில்களில் முதற்கண் வழிபாட்டில் தூய்மை வேண் டும்; பாதகப் பிராமணன் செய்யும் பூசையிலும் பத்தியுடன் அன்பர் இடும் மலர் இறைவனல் ஏற்க்கப்படும் என்பதை நன்முக நீங்கள் நம்புங்கள்;

திருஞானசம்பந்தரே சொல்கின்றார் பத்தி மலர் தூவ முத்தி எளிதாகுமே என்கின்றார்.

இந்த வகை களைப்புல் போன்ற விஞ்ஞான உரைச்சி விருப்பம் தற் புகழ் விருப்பம் இவை நீங்கிய பின் அடக்கமுடைய வாழ்வில் மனம் அமைதி காணுது பல அல்லலும் சேரச் சேர அதனலே அல்லற்படும் மனத்திற்கு பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சச் சொல்லுகின்றார்; உண்மை வழி நிற்பாரை உலகம் மதிப்பது மிகக் குறைவு. ஆகவே மதிப்பின்மை ஏமாற்றம் தடுமாற்றம் காமஉணர்ச்சி கோபம் குரோதம் இவை எழுந்து எழுந்து மயக்கி உண்மைக்கு மாருன வழியில் சிந்தை யைத் திருப்பிட முற்பட்டால் அவ்வேளை பொறுமை சாந்தம் இவற் றைக் கடைப்பிடிக்கச் சொல்லுகிறார், பொறுமையால் தான் எந்தப் பெரிய அல்லலையும் வெல்லலாம்.

இந்த நிலையில் வளரும் தெய்வ உள்ளத்தில் அட்டமா சித்தி கள் முதல் அனைத்து சித்திகளும் வெளி வந்து நிற்கும்; அதனல் உலகில் தலைமைப் பாட்டில் மயங்கிடாது தம்மை நோக்கிக் கண்டு தகவு என்னும் எல்லை வரம்பை வைத்து தன் நிலை பாழாகிப் போ காமல் வேலியிடச் சொல்கின்றார்; இந்த வகை செம்மையான நிலை யில் நின்றல் சிவகதி விளையும் என் கின்றார்; இதனை புண்ணியம் உங்களிடம் இருந்தால் உணர்ந்து தெளிந்து கடைப்பிடித்துப் பாருங்கள்;

தீபத்துக்கு அன்பரின் செய்தி

சந்திர தீபம் ஐயா

தங்கள் பத்திரிகை சில படித்தேன் அடித்தளத்தில் கை வைத்துள்ளீர்கள். சைவத்தை துப்பரவாக்க தெளிவு படுத்த பொலிவிக்கச் செய்ய உலகெலாம் ஒங்கச் செய்ய உங்கள் பணி நல்ல பணி. மணியான பணி. பாங்காய்த் தொடரட் டும் தங்கள் பணி. யார்க்கும் எதற்கும் எச்சந்தேகத்துக்கும் பதில் வியாக்கியானம் கொடுக்கும் தூய திடமான நெறி சைவநெறி.

யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
ஐந்தெழுத்து மந்திரம் எம் நெஞ்சில் இருக்க நாள் என் செய்யும்? கோள் என் செய்யும்?

இப்படியாக்கொத்த நன்னெறியாம் சைவநெறியை சீர்புகழ் நெறியை பிராமணரும் பெரியோரும் வலுவான இரும்பு ம் கறள் பிடிப்பது போலவாகியுளது. தாங்கள் கறள் தட்டி இரும்பைச் சுத்தம் செய்து ஒளி வீசப் பொலிவுடன் விளங் கத் தொண்டு செய்கிறீர்கள். பிராமணர்களைத் திட்டவில்லை பெரியார்களை குறைகூறவில்லை. நன்னெஞ்சத்தவரை வஞ்சனை செய்யவில்லை. குருபரன் போல் வஞ்சகரை வஞ்சிக்கிறீர்கள்.

வணக்கம்

இப்படிக்கு
சின்னவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யும்நெறி அறியேனுக்கு உணர்வுதந்து உய்யவைத்த யோகசுவாமி

சினிமா பாராதே! வானெலி முதல் விண்ணாணம் வேண்டாம். பெண் போகம் தவிர். ஓங்காரம் உன்னில் வரும். வெள்ளைக் காரன் வியப்பான விஞ்ஞானக் கருவிகள் கண்டுபிடித்து நாங்கள் மேலவர் என நினைக்கின்றான். அவன்வழி அழிவிற்குரியது. நாம் சிவனடியார் காட்டும் அறவழி உணர்ந்து ஒழுகி அழியாமை எய்தி நாம் அடியவர் என இன்பமுடன் வாழ்வோம்.

இவையும் இவை போன்ற நல் உணர்வுகளையும் யோக சுவாமிகள் என்னிடம் பல சந்தர்ப்பங்களில் தெரிவித் துள்ளார்.

யோக சுவாமிகள் ஒரு முறை சந்தித்திடும் பொழுது பெரிய புராணத்தைப் பற்றிய கதையில் சிவ தொண்டனில் எப்பகுதி படிக் கிறாய் எனக் கேட்டார். நான் அப்போது தடுத்தாட்கொண்ட புரா ணம் படிக்கிறேம் என்றதும் உடனே பாடல் ஒன்று சுவாமி பாடிய ருளத் தொடங்கியது.

ஐந்து பேர் அறிவும் எனத் தொடங்கும் அப்பாடலைத் தான் தொடங்கிப் பாடிப் பாடி அடுத்தடுத்த வரிகளை அல்லது சொற்களை என்னைச் சொல்லு எனக் கேட்பார். அப்போது அடுத்த வரியை நான் சொன்னால் பிறகு மற்ற வரி தான் சொல்லும். சொல்லி வந்து நா லாவது வரியில் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியுள் எனக் கூறி பின்னர் என்னை நோக்கி மிகுதிஎன்ன சொல் என்றார். நான் 'மலர்ந்தார்' என்றேன்.

ஓம் நீ என்னத்தைக் கண்டு மலர்வாய். நீ அதை எல்லே கண்டு மலர்வாய் என என் மனதில் இயல்பில் இச்சை எழும் பொருளைக் குறிப்பிட்டு காண்பித்தருளியது. எனக்கு வேதனை ஒரு புறமும் வெட்கம் ஒரு புறமும் சிந்தையில் ஒரு புது உணர்ச்சி ஒரு புறமுமாக அந்த திருவாக்கைக் கேட்டு அவ்விடம் நின்றும் நீங்கிக் கொண்டேன்.

சுவாமி தமது நற்சிந்தனைப் பாடலில் பல நல்ல கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார். அதில் மிகவும் உறுதி உடையதாகச் சொ ல்லும் போது 'பெண் ஆசை பொன் ஆசை மண் ஆசையால் மனி தரெல்லாம் சின்ன பின்ன மானரடி கிளியே சின்ன பின்ன மானரடி கிளியே' எனப் பாடியருளி உள்ளார்.

இதைச் சிந்திக்கும் போது பிறவி எடுத்த எல்லா உயிர்க்கும் துயரப் பாட்டை வருவிப்பது ஆசையாகும், இந்த ஆசை மூவகையானது: இந்த ஆசை எதுவும் மனிதனிடத்து பெறக்கூடிய தெய்வ நிலையைக் கெடுத்தே விடுகின்றது. அவனிடத்து காணப்படும் உன்னதமான சக்தி களை நீக்கிவிட்டு மரணத்திற்கே வித்தாக்கி விடுகின்றது. இந்த மூவா சையிலும் மிகப் பொல்லாதது பெண் ஆசையே. இந்த ஆசையை வி ரும்பாவிட்டாலும் யுக தருமம் அதாவது கலியுகம் மிகவலியுடன் இந் த ஆசையைத் தீவிரமாக்குகின்றது.

ஏன் என்றால் உலகில் பல இடங்களிலும் பெண்களின் நடை உடை செயல் அத்தனையும் எந்த தூய உள்ளமுடைய சிந்தனையாளனை யும் தம காட்சியால் கீழ் இறக்கக் கூடிய வகையாக இருக்கின்றது, இதனைத்தான் மாணிக்கவாசகரும் பெண்களைக் கண்டாள் பலாப்பழத் திடை ஈயானேன் என நயம் பட வர்ணித்திருக்கின்றார்.

பலாப்பழம் பழுத்தால் ஈ தேடிவருவது போன்று இந்த ஆசை ப்பாடும் பெண்கள் காட்சியால் ஏற்படுகின்றது. இந்த ஒரு ஆசையை நீக்கினாலும் ஏனைய இரு ஆசைகளும் விடாது பற்றுவன. அவையும் மண் பொன்னாக உள்ளன. உதாரணமாக, ஓர் பிராமணர் தான் போட்டிருந்த பூநூலையும் அறுத்துக் கொண்டு மடாதிபதியானார். மடா திபதி என்றால் அவர் நினைத்தார் சந்நியாசம் வாங்குகின்றேன் என்று: ஆனால் மடாதிபதியாதல் அந்தணர்க்கு சந்நியாசம் வருவிப்பதன்று: பாவம் பூநூலையும் அறுத்து மொட்டையும் தட்டி மஞ்சள் வேட்டியும் சால்வையும் மாட்டின் சந்நியாசம் என அந்த விளக்கமிலாதஅந்தணர் செய்து விட்டார்: செய்துவிட்டு இப்ப மகாநாடு விழாக்கள் எடுக்கி ரார்: அரங்குகள் வகுப்புகள் நடத்துகின்றார். ஒலிபெருக்கி ஒன்று சொ ந்தமாக வைச்சுக்கொண்டார்: பிறகு என்ன ஏழு கட்டைக்கு கத்தி தனைக் கேட்கச் செய்விக்கலாம்:

பாவம் இந்த மடாதிபதியை அரசாங்க சேவையில் தன் கடமை களை ஒழுங்காக நீதியாகச் செய்ய முடியாது பென்சன் எடுத்த ஐயா மாரும் பாதகவழியில் பொருள் ஈட்டி மடாதிபதிகட்கும் தம் பொரு ளில் ஒரு பங்கு பழி நீங்க கொடுக்கும் சவுக்காரம் முதல் பல தரப் பட்ட வியாபாரிகளும் தஞ்சமடைகின்றனர். ஏன் என்றால் தம்பிரான் பட்டம் கொடுப்பார். அப்பொழுது விலாசம் எழும்பும் வியாபா ர ம் சிறக்கும் என்பதாகும் போலும்.

மடாதிபதிகள் உண்மையில் சந்நியாசிகள் அன்று: அவர்களிடத்து இந்த மண் பெண் பொன் என்ற மூன்று ஆசைகளும் தலைப்படுவன இதை அநுபவரீதியாக நாம் காணலாம்:

பொன்னும் மண்ணும் வெளிப்படையாகவும் பெண் இரகசியமாக வும் உள்ளன: இந்த மடாதிபதி எவரையேனும் தமக்கு ஒரு வழி காட்டியாகக் கொள்பவர் ஒரு போதும் உய்த்த திறனை அடையார் அடுத்து மடாதிபதிகளும் ஒரு நாளும் நல் நிலைப்பட்டு வரமுடியாத படி சந்நிதானப் பதவி அவரைக் கெடுத்துக் கொண்டிருக்கும். ஐயோ இற்றைக்கு ஐரோப்பிய நாகரீகம் நாட்டில் பரவி பசுக் கொலை முத லியன பெருக்கிட இந்தப் பாவிகளான மடாதிபதிகள் அவர் நாகரீ கத்தில் தாமும் சிக்குப்பட்டு தங்கள் போக்கை மாற்றிக்கொண்டார்:

இந்த வகையான நிலையில் எத்தனையோ மடங்கள் உள. இந்தியா வில் உள்ள மடாதிபதிகளை பெரியவாள் என்ற பேரில் பத்திரிகைகள் முகப்புப்படம் பிரசுரிக்கின்றன. இந்த மடாபதிகள் பத்திரிகைமூலம் அற வுரை உலகிற்கு செய்கின்றார்கள். ஆனால் இவர்களில் ஆர் ஒருவர் ஐ ரோப்பிய நாகரீகத்தில் அழுந்தாதவர்?

அடுத்து இங்கு சேக்கிழார் விழாவிற்கு தலைமை தாங்கி நடத்தி ஓர் மடாபதி வந்திருந்தார். அவரும் நானும் கொழும்பு இராமகிருஷ் ண மடத்தில் தங்கி இருந்தோம். இவர் ஓர் மடாபதியாச்சே என்று அவர் பூசைக்கு நல்ல மலர்கள் பறித்து நாம் உதவி கூடச் செய் தோம் அவர் ஓர் பெரியவர் என்று மனித்துக் கொண்ட படியால்:

இப்படி ஒரு சில நாள் நடைபெற்றது. அடுத்து அவர் போவதற்கு முதலுள் என்னிடம் கேட்டார் இங்கு ஒரு கைக்கடிகாரம் வாங்கலா மோ? ஏன் என்று கேட்டால் நமக்கு வேண்டிய ஒரு முதலியார் அங்கு உள்ளார், அவர்க்கு நான் கொடுத்தாக வேண்டும் என்றார் அப்போது அவரிடம் நான் சொன்னேன் ஐயா நான் இந்த வகையில் அனுபவம் இல்லாதவன் என்று கூறிவிட்டேன்.

இந்தியாவிலிருந்து இங்கு சமய விழாக்களில் கலந்து கொள்ள வரும் எல்லா சமயத் தலைவர் எனப்படுவார் யாவரிலும் போகும் போது சும்மா போறதோ என்ற மனப்பான்மை உண்டு. வேடம் மிக திறமாக இருக்கிறது. வேடத்துள் மறைந்து நின்று செய்யும் செயல் காண அருவருப்பைத் தருகின்றது. இந்தியாவிலிருந்து இங்கு வந்த பசனைச்சாமி ஒன்று கொழும்பில் இருக்கும் காலத்தில் பல பெண்கள் பசனைச் சாமிக்கு பாலால் அபிஷேகம் செய்தவர் உண்டு. வள்ளி தெ ய்வானை போல் இரு கன்னிப் பெண்கள் சுவாமியின் அருகில் இருந்த வரும் உண்டு. ஒரு கவியோகி சுவாமியை ஆத்மஜோதிகள் காலில் விழுந்து கும்பிட்டதும் சில அம்மையார் கையில் போட்ட காப்பை கவியோக சுவாமிக்கு காணிக்கை கொடுத்ததும் சுவாமி பெண்கள் மீது பிரியமுடன் கண் அருள் செய்ததெல்லாம் நாவலப்பிட்டியில் வை த்து ஒரு நண்பர் சொன்னார்.

இவர்களது பிரசாரநிலையில் கோவில் யாவும் மாசுபடுத் தப்பட்டுள்ளது. பொய் பிரசாரமே மிகுந்துள்ளது: பிராமண னுக்கும் காசு வந்தால் சரி என்று அவனும் எ த ற் கு ம் இணங்கிடச் சித்தமாயினன் அவனுக்கு வேண்டியது கா சு. கலியாணம் கோயிலில் செய்வது தகாது என்று எ ல் லா ப் பிராமணனுக்கும் தெரியும்! தெரியாமல் இல்லை. இவன் காசுக் காகவே இதைச் செய்கின்றான். இது நீதியோ? பெரும்பிழை? உண்மையாகச் சொல்கின்றேன் தெரிந்தும் பிழை செ ய் யு ம் பிராமணனுக்கு நீங்கள் காசு கொடுத்தால் உங்களுக்குத்தான் தீங்கு நேரும். அதாவது உங்களது சந்ததியில் ஏதும் நன்மை கொண்ட பிள்ளைகளைப் பெற மாட்டீர்கள்.

உங்கள் சந்ததியினர் மது உண்பவராகவும் புலால் உண்பவராக வும் பொய் கொலை இவற்றைச் செய்பவராகவும் மாறி உங் கள் சந்ததியில் என்றுமே ஓர் சற்புத்திரரைப் பெறமாட் டீர். இப்ப தெரியாது இறந்த பின்புதான் உமது உயிர் போய் படப் போகின்ற அல்லலில் தான் தெ ரி ய ப் ப டு ம். இந்த உண்மையை ஞானிகள் உணர்ந்து தான் ந ம க் கு சொல்லி வைத்துப் போயினர்.

கோவிலில் நடக்கப்பட வேண்டிய வேத நெறியை மா ற்றி அமைப்பார் கொடிய நரகம் புகுவார் என கந்தபுரா ணம் சொல்கின்றது. இன்று பலரும் பொன்னாசையா கோவி லில் வேத நெறியை மாற்றினரே அன்றி வேறு எக்காரண த்தாலும் அன்று சிவன் அருளியதுவேதம்எனபிராசாரம் செய்கி ரார். ஆனால் சிவன் அருள் செய்த வேதவழியை மாற்றி வேறு வேறு வகை செயலை கோவிலில் கட்டளை சந்நிதான த்தில் நடத்துகிறார். இது இறைவன் பால் அன்புடன் நட ப்பவரது செயல் அன்று. கோவிலில் கலியாணம் செய்வது காசாசை என்பது சாதாரண அறிவுடைய எவர்க்கும் விளங் க வேண்டும்.

உங்களுக்கு ஒரு அநுபவம் எடுத்துக் காண்பிக்கின்றேன் வேத நெறியை அது அந்தக் காலம் இந்தக் காலம் சரிவரா து என்று வேத நெறியை மாற்றி அமைக்கும் பிராமணது வாழ்வைப் பாருங்கள்.

அவர்கள் மிலேச்ச நாகரீகத்தை தங்கள் நாட்டில் பெருக்கு. வெள்ளைக்காரரது செயலிலும் மிக்க மிலேச்ச நெறிகளை இன்று விரு ம்புகின்றனர், மது அருந்தும் மக்கள் மத்தியில் தாமும் ஒருவராம் இருக்கிறார்: கையில் றிஸ்லெற் ஸ்கூட்டரில் போறார். கார் செலுத்து கிறார்: ரான்சிஸ்டர் றேடியோ வேண்டி தம்முடன் கொண்டு போறார் கோயிலில் வேட்டி வெளியில் லோங்ஸ் போடுகிறார்: இவர்கள் வேத நெறிக்குரியவர்கள் என்று சொல்ல முடியாதவகை மிலேச்சராகியுள்ளனர்க

கந்த புராணத்து அண்டகோசப் படலத்து கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் குருவான சுக்கிரன் சூரனுக்கு சொல்வதாக அண்டங்களின் வைப்பில் ஒன்றான இப்பூமியை ஒன்பது கண்டமாக்கி அதில் குமரி கண்டம் என்னும் பகுதியை சொல்லுமிடத்து ஓர் பாடல்மூலம் அதன் சிறப்பைச் சொல்கின்றார்: அதன் உரைநடையை கீழே தருகின்றேன்: இதனை எனது கந்தபுராண உரைப்பதிப்பு அசுரகாண்டம் பக்கம்663ல் காணலாகும்:

மேலாகி மன்னும் மகேந்திரம் பொதியம் சையம் சந்திமான் இரு ட்சம் பரியாத்திரம் விந்தம் என்னும் ஏழு மலைகளும், காஞ்சி, காசி அயோத்தி, மதுரை, மாயை, அவந்திகை, துவாரகை முதலிய ஏழு முத்தி நகரமும் ஆயிரத்தெட்டுத் தலங்களும் பிரியமுடன் ஒதும் வேத த்தின்படி ஒழுகும் பிராமணர் வாழும் தேசங்கள் பற்பலவும் வேத முறை ஒழுகுகின்ற வாழ்வும் பொருந்தப் பெற்று உண்மை நெறிகளு டன் விளங்குதது இந்தக் குமரி கண்டம்: ஆகவே சூரனே! இக்குமரி கண்டம் தான் மேலானது. மற்றைய எட்டுக் கண்டங்களும் பெருமை இல்லா மிலேச்சர்கள் வாழும் இடமாகும். அவை சிறப்புடையனவல்ல:

தபம் செபம் பூசை முதலியவற்றினால் தன்னையும் உண்மைப்பொரு ளான உத்தமனையும் அறியத் திருவருள் கூடும்படி பொருந்தியது பார தத்தின் ஒன்பது கண்டங்களிலே குமரி கண்டம் ஒன்று தான். இங்கு தான் தவம் புரிந்து தம்மீதுள்ள பற்றும் நீங்கி நிற்கும் தலையாய பெருமக்களைக் காண்கிறோம். மற்றும் எட்டெனக் கூறிய கண்டங்களி அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, ருசியா, சைனா, யப்பான், அவு ஸ்ட்ரேலியா, ஆகிய இடங்களில் எங்காவது இப்படியான வேத நெறி ஒழுகி கொலையாமை பூண்டு அன்பு உருவாகி; அனைத்துயிரும் இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் சந்நிதானம் எனக் கருதுகின்ற உத்தமர்களைக் காணமுடியுமா? அடக்குமுறை, ஆதிக்க வெறி, காம லீலைகள், கற்பு இல்லாமை, இந்திரிய வசமாதல், போகம், பெருமிதம், பொல்லாங்கு செயக்கூசாமை கொலை முதலிய பாதகங்கள் நிரம்பி உண்மைப் பொருள் விளக்கமின்றி இரும்பு மனத்துடன் இரும்பின் மூலம் வாழ்வைப் பெருக்கும் மனிதரையே காண்போம். ஆகவே பிறந்த பிறவியின் பேறுன உண்மை ஒளிநாடி அறியும் நாட்டமில்லாது உலக இன்பமே பெரிதென மதித்து அதைப் பேணிப் பெருக்கி வாழும் இயல்புடன் இன்னுமின்னும் நவீன வாகனங்கள், இயந்திரங்கள், சற்பு நெறி உணராத மிருக வாழ்வு அனைத்தும் அக்கண்டத்துள்ளோர் பெருக்கி நிற்லலால் இவர்களை மிலேச்சர் என்றும் பெருமை இல்லாதவர் என்றும் கூறினர்.

வியப்பிலார் எனக் கூறியது ஏனெனில் பெருமை என்பது ஏனைய மக்களைப் போலப் புலன்வழிச் சேராது மனத்தை அடக்கியாலல். இதனை செயற்கரிய செய்வர் பெரியர் என்பார். கற்புடமைஎன்பதே பெண்ணினத்துப் பெருமை: அதாவது என்னிலையும் தான் விரும்பி வாழ்வது ஒரே நாயகனுடனன்றி பின்னரும் சிந்தையை அப்பெண் மாறுகக் கொள்வாள் எனின் அது பெருமையல்ல. இதே போல் ஒரு ஆடவனுக்கும் இல்லறத்திற்கு வேண்டியது ஒரு பெண். அவளுடன் புத்கிர பாகையத்தின் பொருட்டு கூடிவாழ்வதே பெருமை. இச்சை வசப்பட்டு நினைத்தபடி நடப்பானுகில் அது பெருமையல்ல. இதே போல உலகில் செயற்கரிய சிரிய செய்கைகளைக் செய்யும் திருவுடைய பெருமக்கள் தவம் பூசை முதலியவற்றைச் செய்து உய்ய வழிதரும் கண்டம் சுமரி கண்டமே.

இதனை நாம் நன்கு விளங்குவோம் எனில் இன்றைய மிலேச்ச நாடுகளின் நாகரீகப் பொருள் யாவும் நமது ஆன்மார்த்த நிலையில் பொருந்துவதன்று என்பது எந்த ஒருஅறிவாளிக்கும் தெரிந்திடவேண்டும்.

மிலேச்ச நாட்டு நாகரீகம் எதுவும் நமக்கு பயன் தரா சினிமா வானொலி ஒலிபெருக்கியான யாவும் என யோகசுவாமிகள் குறிப்பால் உணர்த்தியமையின் காரணம் யாவர்க்கும் தெரியுமென நம்புகின்றேன்.

நம்மிடத்துள்ள அந்தராத்மாவில் தொடர்பு கொள்ளப் பழகிக் கொண்டால் இந்த மிலேச்ச நாட்டு நாகரீகப் பொருளின் உதவியால் நாம் பெறும் இன்பத்துறை யாவையும் நாம் இயந்திரமிலாதே அநுபவிக்கலாம். இதனை ஒளவையாரும் கற்கலாம் கேட்க்கலாம் கண்ணுரக் காணலாம் எம் உடம்பால் இவை எல்லாம் பெறலாம் என தம் குறள்ப் பாடலில் சொல்லிப் போன காரணமும் அதுவேயாகும்:

இன்னமும் பாவம் பெருக்குவது பாவத்தை என்பது பெரியோர் துணிபு எந்த விதமான மிலேச்சரது பொருளான ஒலி பெருக்கி முதல் அனைத்தும் புண்ணியப் பொருளன்று.

பெண்களது பிறப்பே பாவத்தின் தொழிற்பாடு என்றும் அவர்கள் அடக்கமிலாது தொழிற்பட முற்படுவது கலியின் விருத்தியே எனவும் கந்தபுராணம் முதல் பல நூல்கள்கூறுவன. கமலாலயச் சிறப்பு என்னும் நூலில் பெண்கள் தங்களது காவலான நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு எனும் நால்வகைக் குணங்களையும் நீக்கி அடக்கமிலாது செயல் படுவார் எனவும் ஆண்களுடன் சரிசமமான நிலையில் ஈடுபட முற்படுவார் எனவும் இதே போன்று எத்தனையோவிபரீதச் செயல்கள் அவரால் நடைபெறும் எனவும் கூறப்பட்டுள்ளது. கமலாலயச் சிறப்பு பாடப்பெற்றது கிட்டத்தட்ட 500 ஆண்டுகட்கு முன்பே எனக் கருதப்படுவது.

பாவம் கிழ் நிலைவைக்கு மெனவும் புண்ணியச் செய்கை மேல் நிலைவைக்கு மெனவும் பெரியோர் உணர்த்தி உள்ளனர் இது இப்படியாயின் பாவத்தை நன்மை எனவைத்துக் கொள்ள முடியுமோ? அது முடியாது! மண்ணையும் மனிதரில் புதந்து பெரும் அல்லல் தருகின்றது.

ஆதலினாலே இந்தமுவாசையால் பெறப்படும் துயர நிலை நீங்கி நல்நிலைப்பட்டு தெய்வ நிலை அடைய வாசகர் அனைவர்க்கும் இக்கட்டுரை பயன் தருவிப்பதே என்பது எனது துணி .

சில கோவில்களில் நடைபெற்று வரும் கவலை தரும் செய்திகள்

கோப்பாய் வடக்கு
கோப்பாய்
8 2 79

கனம் சந்திர தீபம் ஆசிரியர் அவர்கட்கு.

ஐயா

தங்கள் 12 1 79 ல் வெளிவந்த சந்திர தீபம் பத்திரிகையை பார்க்கும் சந்தர்ப்பம் தற்செயலாகக் கிடைத்ததையிட்டு மகிழ்ந்தேன்.

சாதாரண சிவனடியார்களிலேதான் சிவபக்தி இருப்பதைக் காணமுடிகிறதென்றும் போலி வேடமிடும் சாமிகளிலோ அல்லது மடாதிபதிகளிலோ அல்லது ஊருக்கு உபதேசம் பண்ணுபவர்களிடமோ இச் சிவபக்தியை காண்பதரிது என தெரிவிக்கிறீர்கள்- இச்செய்தி முழுவதும் பொய்யல்ல என்பது எனக் கெட்டிய வரையில் தெரிகிறது.

கோயிலில் வழிபடும் முறைகள் பற்றியும் அங்கு செய்யத் தகாதனவற்றையும் நாவலர் பெருமான் தமது நூலில் அருளியுள்ளதை நாம் காண்கிறோம்.

ஆனல் அடியார்களுக்கு இப்பழக்க வழக்கங்களில் முன்மாதிரியாக இருக்க வேண்டிய சில பூசகரே பிழைகளை செய்வதை காணமுடிகிறது.

இப்போது நான் சொல்வது நேரில் கண்ட காட்சி.

நடந்து முடிந்த நயினை தீவு நாகபூஷணி அம்மன் கோவிலின் திருவிழாக் காலத்தின் போது 10ம் திருவிழாவன்று நான் போயிருந்தேன் உறவினருடன். கோவிலுக்குட் செல்ல வேண்டிய முறைப்படி சென்று வழிபட்டு அர்ச்சனை களையும் செய்து முடித்துவிட்டு ஐன நெரிசலிருந்தும் விடுபட கோவிலின் தெற்குப் புற வாசலின் வெளிப்பக்கத்தில் ஒரமாக நின்று கொண்டு நடப்பதை அவதானித்தேன். சுவாமி வெளி வீதி சுற்றமுன்பாக கோவிலின் பிரதம குரு (0000000000) குருக்கள் தெற்கு வாசல் பக்கம் தனது மடத்திலிருந்து வந்து கொண்டிருந்தார்.

வரும் பொழுது வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக் குதப்பிக் கொண்டு வந்தார், கோவிலை நெருங்கியதும் தெற்குச் சுவர்ப்பக்கமாகச் சென்று தாம் குதப்பிய வெற்றிலையை துப்பினர். எனக்கு ஒரு கணம் நெஞ்சு அடைத்துக் கொண்டது, அப்போது நாவலர் பெருமானின் அறிவுரையை நினைந்து வேதனைப் பட்டேன். அடியார்கள் பலர் முகத்தை சுழித்துக் கொண்டனர்.

பின்னர் அவ்வாசலில் நின்ற ஒரு பட்டு வேட்டிக்காரரிடம் [அவர் ஒரு டாக்டராக இருக்க வேண்டும்-] குசலம் விசாரித்தார். அம்மனிதர் குருவைப் பார்த்து உங்களுக்கு இப்போ பார்வை சரியாக உள்ளதா எனக் கேட்டு குருவின் கண் மடலையும் தன் கைகளால் திறந்து பார்த்தார்.

அம்மனிதர் குருவைப் பார்த்து இம்முறை இந்தியப் பயணம் எப்படியெனக் கேட்டார். அதற்கு குருவானவர் இம்முறைப் பயணத்தில் நிறைய சாமான்கள் வாங்கி வந்திருப்பதாகவும் தனக்கு நல்ல இலாபம் கிடைத்திருக்கிறதெனவும் கூறக் கேட்டேன்.

அப்போது நான் நினைத்துக் கொண்டது இப்படி எத்தனை குருவானவர்கள் தமது சுய நலத்திற்காக அடியார்களை மயக்கியும் ஏமாற்றியும் சைவசமயத்தின் நற்பெயர்களை அழித்தொழிக்கிறார்கள் என்று.

அடுத்து தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலுக்கு நான் இருமுறை சென்றேன். ரூபா 2 செலுத்தி ரிக்கற் பெற்று முறைப்படி பூசகரிடம் கொடுத்தேன், நிமிர்ந்து பூசகரை பார்த்தேன். அவரின் தோளில் ஒரு சால்வை தொங்கிக் கொண்டிருந்தது. நான் பார்த்த பூசகர்களில் கோவிலில் பூசைக்கு செல்லும் போது தோளில் சால்வை இருப்பதைக் காணவில்லை. கோவிலுக்குள் செல்லும்போது சால்வையை தோளில் இடுதல் செய்யத்தகாத குற்றமென நாவலர் சொல்லியுள்ளதை நான் நினைத்துப் பார்த்தேன். அப்படியென்றால் இப்பூசகர் என்ன கோட்பாட்டின்படி கோவில் சால்வை தரித்து பூசை செய்கிறார் என்பதை நான் சிறிது அறியவேண்டும் எனது ஐயம் நீங்குமா? வணக்கம்

வளர்க சைவமதம் வளரட்டும் சந்திரதீபத்தால்
இங்ஙனம் தங்கள் உண்மையுள்ள சு.சோதிலிங்கம்

கோவில் ஐயர் மன்னிப்புக்கோரினர்

ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவில் திருப்பணிச்சபை பூசைசெய்யும் ஐயரை ஒழுங்கான முறையில் பூசை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தது. ஆனல் இந்த திருப்பணிச்சபையை பல சந்தித்திட்ட மூலம் இல்லாமல் செய்து கோவில் நிர்வாகத்தை தாங்கள் கைப்பற்ற கோவில் பேரில் 20,000 ரூபாய் சேர்த்து தாம் அப்பணத்தை தம் வியாபாரத்தில் பாவிக்கும் முதலாளிகள் இந்த ஐயரை தம் போக்கிற்கு இணங்கச் செய்து அவரால் திருப்பணிச்சபைக்கும் அங்கு நல்ல தொண்டில் ஈடுபட்டிருந்த தூய வாழ்வுடையார்க்கும் அடங்காப் பிடாரி போல் பல இன்னல்களை வருவிக்கச் செய்தனர். இந்த நிலையில் பலர் அக்கோவிலுக்கு தொண்டு செய்யப் போவார் ஐயரின் அபசாரச் செயல் ஒன்றல்ல பல கண்டு கோவிலுக்கு கும்பிடப் போவதையே நிறுத்திக் கொண்டனர். ஐயருக்கு இது நல்ல வாய்ப்பாக இருந்தது இதனலே அவர் பூசை செய்யும் முறையைக் கண்டு சகிக்காத காரியதரிசியும் பொருளாளரும் ஐயரை உட்கோவில் அழுக்காய் இருக்கின்றது இதை ஒரு நாளைக் கென்றுதல் கழுவி விட்டு பூசை செய்யும் எனக் கேட்டனர். அதற்கு அவர் தன் சிறு பையனைக் கொண்டு (அவர் ஒர் சிறு சண்டியனும் கூட) தண்ணிர் தெளித்து விட்டு பூசை செய்வித்தார். சில நாள் கழித்து இதனைக் கண்ட பொருளாளரும் காரியதரிசியும் ஐயரிடம் ஐயா பூசை கடவுளுக்குச் செய்வது. ஒழுங்காய் செய்யவேனும். ஏன் ஐயா உள்மண்டபம் இவ்வளவு அழுக்காய் இருக்க பூசை செய்யுறீர்ர எத்தனை நாள் உமக்கு நன்மையாக இதைச் செப்யச் சொன்னது என்றதும் வந்தது கோபவெறி ஐயருக்கு. உடன் கையில் வைத்திருந்த கைப்பூரத் தட்டை சுழற்றி எறிந்தார். உங்கள் சட்டத்திற்கு இங்கு பூசை செய்ய ஏலாது என வைத்துவிட்டு வீடு நோக்கி புறப்பட்டார். அப்போது பொருளாளரும் காரிய தரிசியும் ஐயா பூசை செய்ய இயலாட்டில் தயவு செய்து துறப்பைத் தாரும் எனக் கேட்டனர், துறப்பு உங்களிடம் தரமாட்டேன்: திருப்பணிச்சபையாரிடம் கொடுப்பேன் என வீட்டை போனர். மகனை பூசை செய்ய அனுப்பினர் இவர்கள் மகன் பூசை செய்வது சரி இல்லை என மறுத்தனர். அவர் போனதும் ஐயர் வெறி அடங்கி திரும்பி வந்து பூசை செய்தார். அன்று சாயந்தரமே திருப்பணிச் சபை கூடியது. திருப்பணிச்சபையார் ஐயரை விசாரித்தனர். முன்கொண்ட ஆங்காரம் வெறித்தனம் எல்லாம் நீங்கி ஐயர் அமைதியுடன் தனது தவறினை ஏற்று மன்னிப்புக் கோரினர். இது 16 2 79 வெள்ளிக் கிழமை அந்தக் கோவிலில் நடைபெற்ற சம்பவங்களின் செய்திகளாகும்.

கார்த்திகை உபயம் கைவிடப்பட்டது.

ஆனைக்கோட்டை முத்த நயினர் கோவிலில் ஓர் அன்பர் முப்பது வருடங்களாகதிருக்காத்திகை உபயம் நியாசார்த்தனை சண்முகார்த்தனை முதலிய சீரிய வழிபாடுகள் ஆறுமுகப்பெருமானுக்கு செய்பவர்; அக்கோவிலில் இதற்கு முன்பிருந்த குருக்கள்மார் அவரது வழிபாட்டு முறைகட்கு இணங்கி அந்த அர்ச்சனை வழிபாடுகளை நடத்திவைத்தனர் ஆனல் கோவில் நிர்வாகம் முன்பிருந்த குருக்களை நீக்கி வேறு ஐயரை நியமித்து அன்பரது சண்முகார்சனை முறைகட்கு இணங்காதபடியால் அன்பர் உபயத்தை மிகு வேதனையுடன் கைவிட்டனர். கோவிலில் நீதியோ ஆதிக்கமோ நடைபெறுவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கோவில் இலட்சார்சனை காண சிந்தை கலங்குது!

இலட்சார்சனை புனிதமான ஓர் அருள் பெருக்கும் நாம வழிபாடு. இதில் தூய சிந்தை யிலாத பாவிப் பிராமணர் தம் மனப்போக்கின் படி கட்டுப்பாடின்றி நடந்து வேதவழக்கங்களை அழிக்கின்றனர். மந்திரங்களை ஒலி பெருக்கியில் ஓதல் பழியின் மேற்பழி. நாம் என் செய்யலாம்? விளங்காத வரை விளங்க வைக்கலாம். ஆனல் வஞ்சகரை எப்படி விளங்க வைக்கலாம் வஞ்சகனுக்கு நெறியும் இல்லை நீதியும் இல்லை.

"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமானே; பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத இன்பம் வருவிப்பானே மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னே" என வரும் திருநாவுக்கரசர் தேவாரத்தின் பொருளை தூய சிந்தையில் விளங்கிக் கொண்டால் இறைவனை நாமம் சொல்லி ஆச்சிப்பதன் உண்மை விளக்கம் யாவர்க்கும் நன்கு புலப்படும்.

அர்ச்சனை என்பன அஷ்டோத்திரம் சகஸ்திரம் இலட்சம் எனும் நாமங்களைச் சொல்லி வழிபடலாகும். இந்த வழிபாட்டில் சீலம் உண்மை ஆகமம் விதித்த தூய மலர் தூபம் விளக்கு இவையாவும் புனிதமுடன் தேடி அர்ச்சித்தல் முறையாகும். சித்தி சங்கற்பமுடன் இவை தொன்று தொட்டு நடைபெற்று வந்தன. இதில் புண்ணியமே பொருளாகக் கொண்டனர் நம் முன்னோர்.

ஆனல் இன்று மேல் நாட்டு நாகரீகத்தில் ஊறி இறுமாந்து அந்த இறுமாப்பிலே தன்னை வியக்கும் பேதையர் கூட்டம் இப்புனித வழிபாட்டில் இயந்திரத்தை; ஒலி பெருக்கி முதல் விளம்பரப் பொருளைப் பாவித்து; கோவிலில் இத்தகைய அர்ச்சனை வழிபாட்டால் நிகழ வேண்டிய அருளின் சிறப்பை அறவே நாசமாக்கி விட்டனர். ஐயோ இந்த மேல் நாட்டவரின் இயந்திர விளம்பரப் பொருளை அருளுக்கு பதில் பழியைப் பெருக்கும் ஒலிபெருக்கி முதல் ஓசைக் கருவிகளை; தனது வேதநெறியை இருபிறப்பின் உயர்வை உணராத பேதைப் பிராமணனும் பாவித்து தன் உயர்வையும் கெடுத்து கோவில் புனிதத்தையும் கெடுத்திடுகின்றனர். ஐயோ இந்த அறிவிலாத பிராமணன் செய்யும் அநியாயங்களுக்கு அளவே இல்லை. கோவிலில் சுவாமிக்கு வைக்கும் நைவேத்தியத்தை கையால் அரக்க பஞ்சிப்பட்டு காலால் அரக்கி விடும் பாதகப் பிராமணனை நாம் என் செய்யலாம். அவனுக்கு வழிபாடே வியாபாரம். பல கோயில்களின் எஜமான்களுக்கு இந்த அர்ச்சனைகள் ஒரு வருவாய் பெருக்கும் செயலாகக் கருதுகின்றனரே ஒழிய அத்தகைய வழிபாட்டை உண்மையாம்படி செய்வார் இல்லை,

அஸ்டோத்திரம் சகஸ்திரம் என்றெல்லாம் அச்சிட்ட துண்டு மூலம் பணம் அறவிடப்படுகின்றது. அதன்படி அர்ச்சனை நடைபெறுவதில்லை. கோயில் உபயத்திற்கு காசு கூட வேண்டி குறைந்த காசுக்கு ரசீது கொடுக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் உள்ளதை ரசீதில் காட்டினுல் வருமான வரி கட்டவேணும் என்று சொல்கிறார்கள்.

இன்று கோவில் என்றுல் எல்லாவிதமான ஏமாற்றம் செய்திடக் கூடிய வியாபார நிலையமாகி விட்டது. கோவில் பேரில் எதையும் செய்தால் ஆரும் பயந்து கேட்கார்கள் என்று எசமான்களும் திருப்பணிச்சபையும் பிராமணனும் துணிந்து கொண்டனர்.

இந்த துணிவால் தூய வழிபாடான இலச்சார்ச்சனையும் விழாவாகி விளம்பரமாகி வியாபாரமாக்கப் பட்டது. உண்மையில் எம் சைவ மக்களுக்கு மந்திரம் தந்திரம் மருந்து என்ற வகையின் பொருளைத் தெரியாது. ஏதோ ஐயர் மந்திரம் சொல்லுகிறார். ஒலி பெருக்கியில் கேட்கின்றது. ஆனல் தந்திரம் மருந்து என்பது அறவே தெரியாது. ஆகமவிதிகளை தந்திரம் என்றும் சொல்வார்கள். மந்திரம் அதன் விதிப்படி ஓதினுல் அது அமுதமாகின்றது. அது மருந்தாகின்றது. அது தீராத நோயையும் தீர்க்கின்றது. மந்திரங்களை உதாத்த அநுதாத்த சொரிதம் என்ற வகை ஓதச் சொல்லி விதி. இது இந்தக் காலத்து பெருவாரி பிராமணர்க்கு தெரியாது. அடுத்து அவன் சில மந்திரங்களை தரன தோம் தோம் என இராகம் இழுத்து இலட்சார்ச்சனையில் மந்திரம் ஓத நான் கேட்டுள்ளேன்; வெருளிப் பிராமணன் சிலர் கத்தரித்தோட்டத்து வெருளியிலும் மிஞ்சி நிற்கின்றார். கத்தரித் தோட்டத்து வெருளி பல பையன்களுக்கு வேடிக்கையாகவும் வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது போல் இந்த வெருளியளையும் பாராட்டும் பேதைத் திருப்பணிச் சபையார் பலர் உண்டு. நாம் என்ன செய்யலாம். கலி காலமாச்சே!

முன்புள்ள பெருமக்கள் உருவேறத் திருவேறும் என்று சொல்ல நாம் கேட்டுள்ளோம். கோவிலில் இயந்திரங்களை விதிப்படி அமைத்து அதில் அந்த இயந்திரத்திற்குரிய மூர்த்தியை ஆவாகனம் பண்ணி முற்றிலும் நெறிப்பட ஒழுகி இயந்திரத்தை பூசித்து மந்திரங்களை அட்சரசுத்தியுடன் ஓதி நாம வழிபாட்டால் இயந்திரத்திற்கு உருவேற்றுதல் கோவிலில் நடைபெற வேண்டிய விடயம். இது இப்படி நடைபெறும் போது இந்த இயந்திர பூசை செய்வார் இந்த இந்த வகை நான் நியமமுடன் இருக்கின்றேன் என்பதை வெளிப்படையாகச் சொல்பவராகி; இறைவா உனக்கு எனது சீல ஒழுக்கங்களையும் அக மலராக இட்டு வழிபடுகின்றேன். என அந்த இயந்திர பூசை செய்யும் போது தாங்கள் ஓதிடும் வாக்கியங்களில் அமைத்து தம் சீலங்களையும் மந்திரம் போல மலர் போலச் சொல்லிட இயந்திர பூசைகள் ஒழுங்கு முறையாக நடைபெறும் சில கோவில்களில் கேட்டுக் கொண்ட ஞாபகம் என்மனதில் உண்டு.

அவ்வாறு இயந்திர பூசை செய்வார் தாம் கடைப்பிடிக்கும் சீலங்கள் யாதாக இருப்பன எனச் சொல்ல நான் கேட்டனவாக இருந்தது என்றுல் தவம் அகிம்சை பாவனை தருமம் புலனடக்கம் பொறுமை சத்தியம் ஞானம் என்னும் எட்டு வகையான சீலங்கள் எனச் சொல்லிட நான் கேட்டுள்ளேன்.

இவற்றை சில அந்தணர்க்கு தெரியும். தெரிந்தாலும் அவற்றைக் கடைப்படிப்பதில் சங்கடம் இருக்கக் கூடும். ஆனல் பெரும்பாலான அந்தணர்க்கு இவை என்ன நிறம் என்று தெரியாது. இன்ன கொட்டகையில் இன்னபடம் ஓடுது. அதன் கதை வசனம் நடிப்பு டைரெக்சன் நடிகர் நட்சத்திரம் நடிப்பு அதன் உயர்வு தாழ்வு எல்லாம் நன்கு புலப்பட்டாலும் இந்த சீலங்கள் என்ன என்றே தெரியாது. நான் சொல்வது பலருக்கு வேதனையாக இருக்கலாம். எனக்கும் ஏன் இந்த வேலை என்றே நானும் என்னை நோவதுண்டு.

சினிமாப்படத்தின் திறமை இளக்கம் அறிவது மட்டுமன்றி மோட்டார் மெக்கானிசம் சிகை அலங்காரம் விநோத கால்சட்டை மேல்சட்டை ஸ்கூட்டர் கார் இவற்றிலும் வானெலி ஒலி பெருக்கி ஒலிப்பதிவு செய்தல் ஒலிப்பதிவு நாடா வானெலியில் விமரிசனம் ஒலிபெருக்கியில் விமரிசனம் எல்லாம் சகஎட்டு சக பதினறு சக முப்பத்திரண்டு என்ற வகை பெருகிக் கொள்ள இவர்களால் முடிகின்றன.

உண்மையாக அந்தணர் குலம் ஒழுக வேண்டிய நியம சீலங்களை சயவாகவும் இயந்திர சினிமா உணர்ச்சியை சகவாகமும் பெற்றுக் கொண்டது. புறத்தே செய்யும் வழிபாட்டு அக வழிபாட்டிற்கு உதவியாக அமைய வேண்டும். அகத்தின் அமைதியை கெடுத்தல் கூடாது. இந்த நிலையில் தான் இலட்சார்ச்சனையில் ஒலி பெருக்கி பாவனை பெரும் திங்கினை வருவிக்கின்றது.

விஞ்ஞானம் முன்னேற மந்திரம் முதல் சீலங்களை மறைத்து அவற்றையும் இயந்திரமயமாக்கி இயந்திரமும் கடவுள் தான்; அந்த இயந்திர மயம் வந்தபடியால் நாம் அதை ஏற்பது தவறே? என்று கேட்டால் அதற்கு நாம் உண்மையில் பதில் சொல்ல மாட்டோம்.

அதற்கு நாம் சொல்லக்கூடிய பதில் அப்படியாயின் இயந்திரத்தை மூர்த்தியாகக் கொண்டு பூசை புரியுங்கள் என்று தான் சொல்லமுடியும்.

சென்ற இதழில் சிகாழி அந்தணர் இருமையின் ஒருமை உடையவர் எனகுறிப்பிடும் பொழுது இருமையின் ஒருமை என்றதற்கு அன்புடன் அறிவு கலந்த ஒருமைபாடு என உரை எழுதி இருந்தேன். அன்பும் அறிவும் இரு வேறு பொருள். அன்புதூயது. அது கபடம் இல்லாத நெறிப்பட்ட வழி; அதே நேரத்து அறிவு உலகில் நல்லன வற்றை உணர்ந்து தியன வற்றை விலத்தி நடந்து கொள்வது. தனிபான அன்பில் தீது நன்மை பார்க்கமுடியாத அளவிலும் இருக்கக்கூடும்; ஆனல் அன்பில் அறிவு கலந்த உடன் இந்த செயல் இந்த புனிதமானபணிக்கு தகாது எனத் தெளிந்து தகாதன வற்றை விலக்கி நடக்க முடியும்.

இலட்சார்ச்சனை என்பது மிகவும் புனிதமான ஓர் வழிபாடு, அந்தநாம வழிபாட்டில் முக்கியமாக கவனிக்க வேண்டியது அதில் விளம்பரம் இருத்தல் தகாது; இவை தூய்மையுடன் நடைபெற வேண்டுமேல் விளம்பரம் ஓர் ஆலகாலவிஷம் எனநாம் நினைந்து கொண்டால் நல்லது.

பொதுவாக எல்லா விதமான சைவசமயக் கிரியை களிலும் விளம்பரத்தை நாம் விலக்கி நடக்வேண்டும். நாம் செய்யும் செயலை பிறரும் அறிய வேண்டும் என வரும் எண்ணமே விளம்பரமாகும்; இந்த விளம்பர மனப்பான்மை வேதநெறியில் வாழும் எல்லா அந்தணர்க்குமே திங்கினை வருவிக்கும்; இந்த விளம்பர மனப்பான்மையுடன் வாழ்ந்த அந்தணர்களது வாழ்வு மிகவும் துக்கமான முடிவில் கொண்டு சென்று விடப்பட்டதை சரித்திரம் எடுத்துக்காட்டும்.

இதைத்தான் வள்ளுவரும் அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும் என சொல்லியுள்ளார்; வள்ளுவர் தனது அறிவுத்திறனை விளம்பரம் செய்ய திருக்குறள் பாடவில்லை; உலகின் நலன் கருதியே இவற்றை ஓதுகிறார் என்பதை நாம் கொள்ள வேண்டும்; யோகசுவாமிகள் அடிக்கடி நங்களுக்கு ஞாபகப் படுத்துவது விளம்பரம் வேண்டாம்; அடக்கமாக நடந்து அடக்கமுடன் வாழப்பழகுங்கள் என்றதாக; இதே போன்று வழிபாட்டில் அடக்கமும் அமைதியும் தலைப்படுமேல் அதனல் விளையக்கூடியபயன் அளவிறந்தது எனலாகும்; அடக்க மிலாத விளம்பரத்தின் மூலம் தொழிற்படும் எந்த வழிபாடும் பயனிலாத பதர் (சப்பட்டை) போலாகிடும்; இதை இன்று சைவமக்கள் அனைவரும் தம் மனதில் கொள்ள வேண்டும்;

ஆனல் தம் வேதநெறியை வியாபார மாக்கிக்கொண்ட அறிவிலாத அந்தணர் கூட்டத்திற்கு விளம்பரம் இன்றேல் தம்விலாசம் பறந்திடுமே! வருவாய் குன்றிவிடுமே! சந்திரதீப ஆசிரியர் வயிற்றில் கடிக்க பிச்சை எடுக்கவோசொல்கின்றார் என்றுல் அதற்கு நாம் சொல்வது நாம் வணங்கும் கடவுள் பிச்சைக்கே இச்சித்த பெருமான்; புண்ணியன் அந்தணன் அநாதி மூவரும் ஆகி நின்ற மூர்த்தி; அவன் அருள் செய்த வேதத்தை அதன் வழியான ஆகமத்தை அதன் வழியான மிருதிமுதல் நூல்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக் கற்றுத் தெளிந்தால் நீங்கள் என்னில் குறைகாண மாட்டீர்கள்: இன்று கல்வி அறிவு ஒழுக்கமில்லாத காடைத்தனம் மிகுந்த பிராமணர் சிலர் நம்மீது பலவிதமான குறைகளைச்சொல்லி தமது மூடத்தனமான மூர்க்கத்தனமான வஞ்சகச்செய்கை களால் தம்மை தமது வேதநெறியை பாழாக்கி விட்டனர். அதைப்பற்றி நமக்கு ஒன்றுமே இல்லை. உலகில் அறிவால் குறைந்த அந்தணரால் நடைபெற்று வரும் அநியாயச்செய்கைகளை தவறு என்று சுட்டிக்காட்டல் என்பணி. ஏன் என்றால் சைவத்தில் அநீதியை நீளப்பரவவிடக்கூடாது: என் நிலை போன்று எல்லாருமே ஆங்காங்கு பரவிடும் அநீதியான செயலை அகற்றிட முனைதல் வேண்டும்: நாம் உலகைத் திருத்தவரவில்லை உண்மை நிலையை எடுத்துகாட்ட முன் வந்துள்ளோம். பலரும் தம் மனதில் தோன்றும் வகை பல பல கதைத்திடலாம்; உண்மை அழியாது; அதை அழித்திட ஆர்க்கும் வழி இல்லை:

திருநீறு வெளிப்படநன்கு பூசி உள் மனதில் வஞ்சனையின் கறுவியமும் கொண்டு தங்கள் வஞ்சமனப்பாங்கின் சொற்களால் பூனை போல் இனிய குரல் பேசும் பண்டிதர்கள் பண்டிதைகள் நம் சைவசமயத்தில் நிறைய உண்டு. நம் யாழ்ப்பாண நாட்டில் இத்தகையோர் 75 சதவீதமானோர் உண்டுஎன்றால் அது தவறில்லை எனலாம். பூனை அழுதால் பால் பறிபோகும்; கோழி கூவினால் அது சுபசகுனமாகும். இதே போன்று பல அல்லலை தமது புகழ் விருத்திக்காக பல சமயப்பிரசார பண்டிதர்கள் நமது கோவில் வழிபாட்டில் வருவித்துக்கொண்டனர். இவர்கள் ஒருவர் பிழையான செயலைச் செய்பவரும் பிழைஎன அறிந்து திருத்தப் போனால் திருத்துபவரையும் திருத்தவிடாது தம் வஞ்சனையால் திருந்தவிடாமல் தம் சுயநலப் போக்கிற்கு தம் பக்மாக்கி; நன்மையையும் தீமையால் வெல்லுவதே கருமமாகக் கொள்கின்றனர்:

இந்த வஞ்சகரது சுயநலப் போக்கால் இன்று கோவில்களில் நடைபெறும் அமங்கலமான அநியாச் செய்கையில் நின்றும் மக்கள் விடுபட முடியமால் இருக்கின்றனர். பழிக்கஞ்சாப் பாவிப் பிராமணர் கோவில் கிரியைகளில் நல் வழி காடடி நடத்திட வேண்டியவர் தீயவழியை தமக்கு வாய்ப்பான வற்றை நல்வழி என காட்டி வஞ்கரின் மனப்போக்கை தாமும் ஆதரித்தனர். இந்த நிலையில் யாழ்பணக்குடாநாடின் தென் பகுதியில் உள்ள பிராமணர் பெரும் பங்கு கொண்டனர். இந்த பழிப் பிராமணரில் ஒருவன் சங்காபிஷேகம் செய்யப் போய் ஒலி பெருக்கி இல்லை. என்று புறு புறுத்தவனும் உண்டு. அது இல்லாட்டில் என்ன என்று சமாதானம் செய்த சாத்திரி ஒருவனும் உண்டு. வெளியிலே பார்த்தால் "சூ"கோலம் திருநீற்றுப் பூச்சு என்ன? ஐயோ இவங்களது பழியான செய்கையைப்பார்த்தால் பெரும் பதைப்பு வருகிறது; இது காறும் ஒலிபெருக்கி பாவித்தது தவறு என்று உணர்ந்து இது வேண்டாம் என்று திருந்திய முறைபில் அடக்கமாக சங்காபிஷேகம் செய்யப்போன ஒரு உத்தமியின் செயலில் இந்த மாதிரி குருக்கள் புறு புறுத்தால் இந்த பாதகரை நாம் வேறு என் சொல்லலாம்:

இந்தியாவில் கூனி இருந்தாள்; சகுனி மாமா இருந்தான்; இரண்டு பேராலும் பல தீங்குகள் நேர்ந்தன என. இராமாயணமும் பாரதமும் சொல்கின்றது: கூனி இராமனை அல்லல்பட வைத்தாள். அவள் போக்கு பரதனுக்கு நன்மை செய்ய தன் வஞ்சனையைப் பாவித்தாள்: அந்த ஒரு செயலால் தசரதர் சாம் பிராச்சியம் தீராத அல்லலைப்பெற்றுக் கொண்டது:

அவளது செயல் எவ்வளவு துயரை வருவித்தது சிந்தித்து பாருகள். இதே போன்று சகுனி என்ன செய்தான்? தான் தன் மருமக்களுக்கு நன்மை செய்கின்றேன் என எண்ணி துரியோதனுதியரை வேரோடு அழித்திட வகை செய்து விட்டான்.

துரியோதனது ஆட்சிக்காலத்தில் சகுனியினது செயல் பாடு நல்ல முறையில் அவனுக்கு இருப்பதாக அமைந்தாலும் முடிவு என்ன? பாரதப் போரில் துரியோதனன் குலம் வேரோடு அழிந்தது, சத்தியம் வென்றது சகுனியின் துர்போதனையின் சாமர்த்தியம் அழிந்தது:

இதை பொதுவாக நம் மக்கள் உணர வேண்டும்: சந்திரதீபம் கோவிலில் ஒலி பெருக்கி வேண்டாம் கோவிலில் அது பெரும் பாதக விளைவுகளை வருவித்துகோவிலில் இருக்க வேண்டிய அருள் நிலையைக் கெடுத்து விடும் என்று கருத்து தெரிவித்தது. இது சரி என அறம் தலைநின்ற அந்தணரும்; வேதத்தின் சீலம் உணர்ந்த பெருமக்களும் வரவேற்று அறம்விளங்கி அந்தணர் இந்த ஒலி பெருக்கி பாவனையை அறவே நீக்கிக்கொண்டனர்: சந்திரதீபம் ஒலிபெருக்கி பாவனையை கோவிலில் கட்டுப்படுத்த கருத்து வெளிப்படுத்தியது ஏதும் ஓர் சுயநலமில்லாத செயலே: உண்மையில் கோவில்களில் புனிதத்தையும் கோவிலுக்குரிய பண்புகளாய சாந்தத்தையும் அருளையும் பெருக்கும் நோக்கமாகவே இருந்தது:

இந்த கருத்தை தீபம் தெரிவிக்கும் போது ஏதும் ஒரு வஞ்சனை அணுவள வேனும் இல்லாத தூய்ய மனத்தின் தெளிந்த துணிவால் சொல்லியது:

இந்த நிலை வந்தவுடன் இதனைக்கண்டு தங்கள் புகழை விலாசத்தை பெருக்கிட இரண்டு மந்திரம் மட்டும் படித்து சீலத்தின் நிறம் தெரியாத சாத்திரிசட்கு எடே ஒலிபெருக்கியில் உரக்கக்கத்தி எங்கடை வேலையைச் செய்ய இவன் ஒருவன் குறுக்கே வந்தானே! கும்பகர்ணன் குறட்டை விடுவது போல் ஒலி பெருக்கியில் ஊழையிடும் மறப்பிராமணர் வேதப் பண்பு அறியார் பெரிதும் வேதனைப் பட்டனர்:

இந்த மறப்பிராமணரது நடத்தை செயல் அனைத்தும் ஊரில் பலருக்கு தெரியாமல் இல்லை; இவர்களில் பலர் தங்கள் உழைப்பில் மது இரகசியமாகவேண்டி மறையவைத்து உண்பாரும் உண்டு. இத்தகைய ஒழுக்கக்கேடான பிராமணர் தங்களது உள்ளத்து ஒழுக்கக்கேட்டை வெளிப்படக் காட்ட முடியா வகையில் ஒலிபெருக்கி அவர்க்கு பெரும் உதவி செய்தது: இதை விட கோவிலில் தங்கள் பிரசாரம் மூலம் பொருள் வருவாய் செய்யும் பிரசங்கிகட்கும் தம்பிரான்சுவாமிகட்கும் நமது கருத்து வேதனை வருவித்துக் கொண்டது, ஒலிபெருக்கி இல்லாதிருந்தால் பிரசங்கம் எடுபடாது: அத்த ஒரு நிலையில் காசில்லாது போனாலும் பட்டமும் புகழும் மதிப்பும் பெற்றிருந்த பண்டிதர் பண்டிதைகளுக்கும் நமது கருத்து வேதனை கொடுத்தது:

உடன் இவர் எல்லோரும் சகுனியாகவும் கூனியாகவும் மாறினர்: ஐயோ கோவிலில் ஒலி பெருக்கியில் மந்திரம் சொன்னால் கேட்கும் எல்லையில் ஒரு தீங்கும் வராதே! சந்திரதீபம் ! இப்படி செய்யலாமோ! என்றார்கள்: ஒலிபெருக்கி வேணுமென்றார்கள் உண்மையில் ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவில் இலட்சார்ச்சனையில் ஒலி பெருக்கியில் ஒரு உச்சகட்ட நிலையில் மந்திரம் சொல்லும் ஐயா நல்ல பிடி பிடிக்கிறார் என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால் ஒலிபெருக்கியில் மந்திரம் நல்லதாகும் என இவர் சொல்லும் சொல்லுக்கு மாறாக வருடா வருடம் ஒவ்வொரு செத்தவீடு கோவில் பக்கத்தில் இலட்சார்சனை காலத்தில் நடக்கும். இதனால் இலட்சார்சனை தடைப்படுவது உண்டு. ஒலி பெருக்கியில் மந்திரம் ஓதும் இவர்கள் ஏன் தீட்டு துடக்கு பார்ப்பான் ஒரே பிடியாய் நிற்ப்பாட்டாது பிடிக்கலாமே. உயரப்புலம் குருக்களும் ஒலி பெருக்கி வேணும் என்பாரும் எல்லாரும் ஒரு கணத்தவரே. இவர்கள் ஆகமவிதி ஏன் பார்ப்பான்.

இது மட்டுமல்லாது பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவிலும் இலட்சார்ச்சனையில் ஒலிபெருக்கிமூலம் மந்திரங்கள் ஊரடங்சக் கேட்கப்பட்டன. ஆனால் இலட்சார்ச்சனை முடிவின் இரவு அன்று முன்னால் உள்ள பிள்ளையார் கோவில் ஐயரையும் அவர் மகனையும் கள்ளர் வந்து வாயைக் கையைக் கட்டிப்போட்டு களவாடிய சம்பவம் உண்டு. இதே போன்று எத்தனையோ அசம்பாவிதங்கள் ஊரில் நடக்க இந்த மறம் நின்ற அறம் தெரியாத பாதகப் பிரமணன் தம் பாதகப் பெருக்கத்திற்கு எத்தனை பொய் சொல்லுவார் தெரியுமோ?

இப்படியாக இந்த சாத்திரி தம்பிரான் தங்கச் சியள்தம்பியள் எல்லாரும் மனதில்பட்ட பலதையும் சொல்லி நல் நிலைபடவிருக்கும்கோவிலையும் பழுதாக்கு கின்றனர். நேரில் அநுபவத்தில் பிழையைக்கண்டாலும்திருந்தாதவன் பின்னரும் தனது பிழையைப் பெருக்கு வோன் வஞ்சகனே என கந்தபுராணம் வலி உறுத்திச் சொல்கின்றது.

இந்த வகை பாதகப் பிராமணரும் வஞ்சகரான பிரசாரகரும் கோவிலின் புனித நிலையை தம் பிழைப்பிற்கும் வருவாய்க்குமாக அமைத்த உடன் கோவில் எங்கும் அருள் நிலை கெடத்தொடங்கிவிட்டன. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் முதல் எல்லாக் கோவிலிலும் இந்த அறம் தெரியாத அந்தணர்களது நடத்தையாலும் பிரசாரகர்களாலும் காடைத்தனம் மிகுந்த திருப்பணிச்சபையாராலும் தீங்குப் பெருக்கமே மிகுந்ததுஇந்த வகை ஒலி பெருக்கி பாவிக்கப்படும் எந்தக் கோவிலும் நாள் தோறும் அருள் நிலை குன்றி வன்செயல்கள் மிகிந்திடுகின்றன இதற்கு ஆதாரமாக இந்த ஒலி பெருக்கி பாவனை முதல் பல அமங்கலச் செயல் நடைபெறும் கோவில்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களைக் கொண்டு நீருபிக்க என்னால் முடியும்,

விஞ்ஞானம் உண்மை ஞானத்தை ஒரு போதும் வருவியாது. விஞ்ஞானம் உண்மை ஞானத்தைக் கெடுத்து பல விபரீதச் செயலைப் பெருக்கி நிற்கும். கோவில்கவில் விஞ்ஞானமூலம் கிரியைகள் நடை பெற்றால் நாட்டில் தற்கொலை களவு கொலை வன் செயல் இனப்பகை பெரியோர் மதிப்பின்மை தந்தை தாய் பேணாமை அனைத்தும் பெருகும். அரிதாகக் கிடைக்கப் பெற்ற மனிதபிறவி அது அடைய வேண்டிய உண்மை இன்பத்தைப் பெறமாட்டாது கொடிய இருளாய துயர நிலையில் இந்த அநியாயச் செய்கைகள் கொண்டு சேர்க்கும்;

சைவப்பெருமக்களே இந்த உண்மை வார்த்தையை நீங்கள் நம்புங்கள். எமது வேதவழக்கம் எம் கோவிலில் நடை பெறுவன மிகவும் ஈனமான ஒரு நிலையை அடைந்துள்ளது. இன்று கோவில் என்றால் தற்பெருமை புகழ் பாராட்டு இவற்றைப் பெறுவதற்குரிய இடமாகிவிட்டதே அன்றி வேதவழக்கப்படி அங்கு கிரியைகள் நடைபெற்று. மனிதன் பிறவித் துன்பத்தைப் போக்கற்கு எற்ற இடமாக அயைவில்லை.

இன்று சிலரது கௌரவத்தையும் புகழையும் பேணிட விரும்பி கோவிலில் நடைபெறவேண்டிய புனிதச் செயலை அமங்கலமாக்குகின்றனர். என்று சொல்லும் போது நம் பெரும் குரவரான நால்வர் சொல்வதை அடிப்படையாகக் கொண்டே சொல்கின்றேன். நாம் நமது போக்கில் ஒன்றைச் சிருட்டித்துச் சொல்லவில்லை. நான் சொல்வதை நாயன் மார் சொல்லவில்லை என யாரும் மறுத்து பதில் எழுத உரிமை உண்டு. அவ்வகை எழுதினால் என் பத்திரிகையில் நிச்சயமாக பிரசுரித்து நான் தவறு சொல்வதாயின் மன்னிப்பும் கோருவேன். குதர்கம் எழுதாது நீதியை விரிவாக விளக்கி காட்டினால் நிச்சயம் பிரசுரிப்பேன். உங்கள் புகழை ஊருக்கு காட்ட கோவிலில் ஒலி பெருக்கியையும் விலைக்கு வாங்கி வைத்து வேதநெறியை அமங்கலமாக்கிக் கொண்டு அந்தப் பெண்பிள்ளை அவர்க்காக வலி இலாத என்னை வலி செய்து மடக்கப் போறியளோ?

சில அலுவல்களை கோயிலில் இப்படிச் செய்தால் நல்லது. வேதவழக்கங்கட்கு பொருத்தமானது என்றால் அதை கேட்டு திருந்த முற்படும் சிலரையும் இந்த உருத்திராட்சப் பூனைப்பண்டிதர்கள் பண்டிதைகள் திருந்த முற்படுவார் வழியில் தாமாகப் பிரவேசித்து "சா" அதற்கு விடப்பாடாது. ஒலிபெருக்கி வேணும் விளம்பரம் வேணும் நாலு பேர் நங்கடை செயலைக் கேட்கிறதல்லேயோ என தமது வஞ்சனையின் நஞ்சைப் பரப்பிட திருந்தும் மனமும் இவர் பூசும் வஞ்சகயோசனையில் எடுபட்டு திரிசங்கு சொர்க்சமாகி வழுக்கி விழுந்திடும்.

ஐயோ பழிக்கஞ்சா பாதகர் இவர் செய்யும் கபடம் பொய்மைக்கு இன்று அளவே இல்லை. இந்த நிலையில் அரசாங்க சேவையின் திறம் பயிற்சியால் ஒய்வு பெற்றவரும் கண் சாடையாக எந்தப் பக்கம் வலுப்பெறுகிறதோ அந்தப் பக்கம் குதிக்கும் சுவர் பூனையாயினர்: உருத்திராட்சப் பூனை சுவர்ப்பூனை எல்லாம் சேர்ந்து புனிதமுடைய வேதவழக்கத்தை கெடுக்கின்றனரே! வஞ்சகனையும் தந்திரியையும் ஒருபோதும் உயர்ந்த நெறிகட்கு ஆட்படுத்த முடியாது. தீபத்தில் வெளிவந்த திருநாவுக்கரசர் தேவாரத்தை திரும்பத் திரும்ப படியுங்கள் நான் சொல்வது சரி என விளங்கிடும்.

இத்தகைய இலட்சார்ச்சனையை புனிதமுடன் நடத்துவதே முறைமை. தயவு செய்து ஒலி பெருக்கி பாவனையை அறவே வழிபாட்டில் நீக்குங்கள். இலட்சார்ச்சனை காலங்களில் பிரசாரமோ பிரசங்கமோ கச்சேரிகளோ செய்து நீங்கள் நம் வேதவழக்கத்தை நெறியை மாசு படுத்த எண்ணாதீர்கள். தமிழ் தாய்க்கு செய்யும் உண்மைத் தொண்டு தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நிலவி வந்த நற் செயல்களை நற்பண்புகளை நாம் இன்னமும் புனிதமுடனும் புண்ணியப் பெருக்குடனும் நடத்திக் கொள்வலாகும். நம் நாயன்மார் காட்டிச் சென்ற உயர்ந்த வழிக்குரிய வழிகளை நீங்களும் தேடிக் கொள்ளுங்கள். பிராமண சமுதாயமே தயவு செய்து சைவ நெறியை பாழாக்காதே! வியாபாரமாக்காதே! விளம்பரமாக்காதே! நாயன்மார் திருப்பதிகங்களை நீயும் ஓது! விளங்கு! ஊருக்குக் காட்ட ஓதாதே! உன்னை உணர உயர்த்த நீ ஓது: இன்றுங்களில் ஆரும் வேத நெறிக்குரிய நிலையில் இல்லை: விலாசம் பெரிதாக இருக்கிறது. ஆனால் செயல்களைப் பார்த்தால் தீமை பயப்பனவாக உள்ளது. உங்கள் செயல்கள் இன்றைய இயந்திர உலகிற்கு பொருத்தம் என நீங்கள் நினைக்கலாம், ஆனால் நெறிப்பட்டு வாழும் உங்கள் குலத்தின் பெருமையை உயர்வை அநுபூதி நிலையை இயந்திர உணர்ச்சி அறவே அழித்துவிடும்.

இப்பத்திரிகை கொக்குவில் மேறகில் இருக்கும் வை. நல்லையா அவர்களால் வெளியிடப்பட்டது, தொடர்பு கொள்வோர் சந்திர தீபம் கொக்குவில் என விலாசமிடலாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org